விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26

ஒலி 268 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 28 சனிக்கிழமை (13.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

அரசியலில் பரபரப்பு

## சீனத் தூதுவர் ரணில் சந்திப்பு



03ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர் தமிழர்களைத் திருப்திப்படுத்தவே விஜேராமாவிலிருந்து மகிந்த வெளியேற்றப்பட்டார்

### சரத் வீரசேகர காட்டம்



(கொழும்பு)


புலம்பெயர் தமிழர்களைத் திருப் திப்படுத்துவதற்காகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தி யோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார் என முன் னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து வெளியிடு கையில் சரத் வீரசேகர இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக் கையில்,

மகிந்த ராஜபக்ஷவை அரச மாளிகையில் இருந்து வெளியேற்றும் நடவடிக் கையில் புலம்பெயர்

15ஆம் பக்கம் பார்க்க



# மீண்டும் எழுவேன்

### மகிந்த அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

அரச பயங்கரவாதம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தான் மீண்டும் எழுவேன் என்று தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## கற்கோவளத்தில் மீனவ வாடிகள் விஷமிகளால் எரிப்பு

### இருவர் படுகாயம் ; மீனவர்கள் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

## எதிர்க்கட்சித் தலைவருக்கு நேரம் வழங்காததால்

### பாராளுமன்ற அமர்வில் அமளி

(கொழும்பு)

பேசுவதற்கு நேரம் வழங்கு மாறு எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ கேட்ட நிலையில் அதற்கு சபாநாய கர் வாய்ப்பு வழங்காததால் நேற்றைய பாராளுமன்ற அமர் வில் சற்று பதற்ற நிலை ஏற் பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க

## 40 போதை மாத்திரைகளுடன்

### கொழும்புத்துறையில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொழும்புத் துறைப் பகுதியில் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பு நட வடிக்கையின்போது 20 வயது இளைஞர் ஒருவர் 40 போதை

15ஆம் பக்கம் பார்க்க

## சட்டச்சிக்கலுக்குத் தீர்வு கண்டபின் தாமதமின்றி மாகாண சபைத் தேர்தல்



### அமைச்சர் சந்தன அபேரத்ன

(கொழும்பு)

சட்டச் சிக்கலுக்குத் தீர்வு கண்டபின்தாமதமின்றி மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன் றங்கள், பொதுநிர் வாக அமைச்சர் சந்தன அபே ரத்ன தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் இலங்கைத் தமிழர சுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் பிறந்து 4 நாட்களான குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழில் பிறந்து நான்கு நாட் களேயான ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

நவாலி தெற்கு, மானிப் பாய்ப் பகுதியைச் சேர்ந்த கவி நாத் பூஜிதா என்ற தம்பதி களின் முதல் குழந்தையே

15ஆம் பக்கம் பார்க்க

## மோ.சைக்கிளிலிருந்து தவறிவிழுந்த பெண் மரணம்



### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது தவறி விழுந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட புன்னை

15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் விபத்து: மாணவன் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ9 வீதியில் நேற்று இடம்பெற்ற விபத் தில் பாடசாலை மாணவன் ஒருவன் படுகாயமடைந்துள் ளான்.

15ஆம் பக்கம் பார்க்க

## சுழிபுரத்தில் கிணற்றில் தவறி விழுந்த பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் கிணற்றில் தவறிவிழுந்த பெண் ஒருவர் நேற்று மரணமடைந் துள்ளார்.

இதில் தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த ராமமூர்த்தி சீதாலட்சுமி என்ப வரே இவ்வாறு உயிரிழந்துள் ளார்.

குறித்த பெண் நேற்றுக் காலை கிணற்றிலிருந்து தண் ணீர் எடுத்தவேளை தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை தி டீ ர்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
27 . 06 . 1998

இறைவன் அடியில்
25 . 08 . 2024

## அமரர் சிவயோகபதி கௌதமன்

(பொதுச் சுகாதாரப் பரிசோதகர் - மொரட்டுவ)

திதி : 13.09.2025

பாசத்தின் உறைவிடம் எம் அன்பு மகனே,
இடிபோல் எம்மை ஏங்க வைத்து
எங்கே ஓடி மறைந்து போனீர்
ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும்
உன் நினைவுகள் என்றும் எம்மனதில்
அழியாத கோலங்களாய்,
உன்னை மறக்க முடியாமல்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...


076 611 1826
077 687 8971

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(C-3857)

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 - 10 - 1941



மறைவு
12 - 09 - 2025

## திருமதி பாலசுப்பிரமணியம் தங்கம்மா

சாரையடி, புலோலி தென்மேற்கு புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் தங்கம்மா அவர்கள் நேற்று (12.09.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் பொன்னையா - தெய்வானை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பொன்னையா பாலசுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும் மயூரன் அவர்களின் அன்புத் தாயாரும் தவச்செல்வி அவர்களின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, சண்முகநாதன், தியாகராசா மற்றும் நடராசா, கணேசலிங்கம் (அவுஸ்திரேலியா), அமிர்தலிங்கம் (அவுஸ்திரேலியா), பஞ்சலிங்கம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, சிவசுப்பிரமணியம், விஜயலட்சுமி மற்றும் பிரியாணி (அவுஸ்திரேலியா), றஞ்சிதமலர் (அவுஸ்திரேலியா), பானுமதி (அவுஸ்திரேலியா), பரமேஸ்வரி, பாலச்சந்திரன் அவர்களின் மைத்துனியும் சங்கவி, மகீஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மயூரன் (மகன்)
077 918 0492

(C-3860)

# கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ/து)
A9 வீதி, பரந்தன்

## விலைமனுக் கோரல்

கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான பரந்தன் மக்கள் வங்கி இயங்கி வரும் கட்டட தொகுதியினை திருத்தம் செய்வதற்காக கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் தகுதியான ஒப்பந்த தாரரிடமிருந்து கீழ் குறிப்பிடப்படும் வேலைகளை நிறைவேற்று வதற்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. கட்டட தளத்திற்கு மாபிள் (Tiles) பதித்தல்
02. லெவல்சீட் (Levelsheet) அடித்தல்.
03. கட்டடத்தின் முன்பகுதிக்கு கண்ணாடி (Glass) பொருத்துதல்

- மேற்குறிப்பிட்ட வேலைகள் தொடர்பான முழுமையான விபரங்களை A9 வீதி. பரந்தனில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
- விலைமனு கோரலுக்கான ஆவணங்களை எதிர்வரும் 25.09.2025ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திரு. தி.பிரபாகரன்
தலைவர்,
கரைச்சி வடக்கு பலநோக்கு
கூட்டுறவுச் சங்கம்,
பரந்தன்.

தொடர்புகளுக்கு
அலுவலகம்
தொ.இல - 021 228 0037
பொதுமுகாமையாளர்
தொ.இல - 077 789 3966

(C-3858)

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 - 05 - 1952



மறைவு
10 - 09 - 2025

## திருமதி பஞ்சாட்சரம் யோகேஸ்வரி

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சாட்சரம் யோகேஸ்வரி(வேவி) அவர்கள் கடந்த 10.09.2025 புதன்கிழமை அன்று எல்லாம் வல்ல இறைவனின் பாதக் கமலங்களை சரணடைந்தார்.

அன்னார் பொன்னம்பலம் - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகளும் விசுவலிங்கம் - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும் பஞ்சாட்சரம் அவர்களின் அன்பு மனைவியும் விஜயேந்திரன்(அமரர்-நோர்வே), விஜயமாலினி, விமலேந்திரன்(சுவிஸ்), விபுலேந்திரன்(பிரான்ஸ்), வில்வேந்திரன், லவேந்திரன்(பிரான்ஸ்), குஜேந்திரன்(பிரான்ஸ்), சிவேந்திரன், கஜேந்திரன்(அமரர்), பவீந்திரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருபானந்தா, யாழினி, ரோஜாரமணி, சுபாஜினி, வளர்மதி, சுதர்சினி, ரஜனி, ஜெஸ்தினி, நிரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும் இரத்தினேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ராகேஸ்வரி, சரஸ்வதி, இராசலிங்கம், சண்முகலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சங்கீதா, சர்மி, சஜீவன், சனோஜன், கிரீசன், பிரியங்கன், ஜெவகர், ஜெஸ்மினி, சுவஸ்திகன், வினோஜன், சௌபர்ணிகா, ஆதீரா, சாய்ரன், பவோஜன், வந்தனா, அக்சயன், அஸ்வினன், அரிஸ், அனன்யா, அபிஷேக், அட்சயா, அஸ்வின், சுகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்

(5408)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை அரசியலில் அவசர நகர்வுகள்

# ரணிலையும் சந்தித்த சீனத் தூதுவர்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த சீனத் தூதுவர் குய் ஜென்ஹோங் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.**



சீனத் தூதரின் வேண்டுகோளின் பேரில் நேற்று முன்தினம் கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள ரணிலின் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க பிணையில் விடுதலை செய்யப்பட்ட பின்னர் நடக்கும் முதல் உத்தியோகபூர்வ இராஜதந்திர சந்திப்பு இதுவாகும்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கொழும்பில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறுவதற்கு முன்பு சீனத் தூதருடன் கலந்துரையாடலை நடத்தியிருந்தார்.

அத்துடன் சீனத் தூதுவர் எதிர்காலத்தில் மற்றொரு உயர் மட்ட முன்னாள் அரசியல்வாதியைச் சந்தித்து கலந்துரையாடவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. முன்னாள் ஜனாதிபதிகளுடனான சீனத்தூதுவரின் சந்திப்பானது உள்நாட்டு அரசியலில் மட்டுமின்றி சர்வதேச ரீதியிலும் கவனத்தை ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சஷீந்திரவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல - கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரசாங்க நிலத்திற்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ நுகேகொடை பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் ஓகஸ்ட் 6 ஆம் திகதி காலை கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட சஷீந்திர ராஜபக்ஷ கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 6 அரிய வகை பாம்புகளுடன் இலங்கை வந்த பெண்

### கட்டுநாயக்கவில் அதிரடியாக கைது

(கொழும்பு)

உயிருள்ள 6 அரிய வகையான பாம்புகளை கடத்திவந்த இலங்கைப் பெண் ஒருவரை, சுங்க அதிகாரிகள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்துள்ளனர்.

40 வயதுடைய குறித்த இலங்கைப் பெண் பயணி, இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் மூலம் பெங்கொக்கிலிருந்து சென்னை வழியாக இலங்கை வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள், பல்லுயிர், கலாசார மற்றும் தேசிய பாரம்பரியப் பாதுகாப்புப் பிரிவுடன் சேர்ந்து மேற்கொண்ட சோதனைகளில் இந்த பாம்புகளைக் கண்டுபிடித்தனர்.

1 புள்ளிகள் கொண்ட ராஜநாகம், 1 மஞ்சள் அனகோண்டா, 3 ஹோண்டுரான் பால் பாம்புகள், 1 உருளை மலைப்பாம்பு என்பனவே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த பாம்புகள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினங்களின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளவைகள் என தெரியவந்துள்ளது. (நி)

## மாகாண சபைகளில் 61 ஆயிரத்திற்கு மேற்பட்ட பதவி வெற்றிடங்கள்

(கொழும்பு)

இலங்கையின் மாகாண சபைகளில் பல்வேறு பதவிகளுக்கான 61 ஆயிரத்து 835 வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்படாமல் உள்ளதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

அவற்றில் அதிகபட்சமாக 16 ஆயிரத்து 651 வெற்றிடங்கள் மேல் மாகாண சபையில் நிலவுவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வெற்றிடங்களை நிரப்ப ஆட்சேர்ப்பு முயற்சிகள் நடந்து வருவதாக அமைச்சர் உறுதிப்படுத்தினார்.

நாடு தழுவிய சேவைகளுக்கு 1,000 பல்கலைக்கழக பட்டதாரிகள் ஏற்கனவே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் 1,000 பேரை பணியமர்த்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரச துறையை வலுப்படுத்தும் ஒரு பரந்த நடவடிக்கையாக 35 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (நி)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பொன்.சுகந்தனின் ஆன்மிகப்பணி வரலாற்று ஆய்வு நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு உடப்பு 6 ஆம் வட்டார இந்துநெறிக் கழக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (3)

## அரசியலில் இருந்து ஓய்வு பெறவில்லை-சமல்



(கொழும்பு)

நான் அரசியலில் இருந்து ஓய்வுபெறவில்லை.

தற்போது நடப்பவற்றை உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன் என முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசியலுக்குள் வந்துவிட்டால் அதனைக் கைவிட முடியாது. நான் இன்னும் ஓய்வுபெறவில்லை.

தற்போது நடப்பவற்றை அவதானித்து வருகின்றேன். எமக்கு மக்கள் ஆதரவு உள்ளதா என்பதை தேர்தலில் போட்டியிட்டே கண்டறிய முடியும்.

பல மாதங்களுக்குப் பிறகு பொதுவெளிக்கு வந்த சமல் ராஜபக்சவிடம் அரசியல் நடவடிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## நாமலின் திருமணத்தில் மின்சார மோசடி மனுவை விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமண கொண்டாட்டத்தில் இலங்கை மின்சார சபையிடமிருந்து 2 மில்லியன் ரூபாய்க்கு அதிகம் மதிப்புள்ள மின்சாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மனுவை தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்த உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமண வரவேற்பறையில் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்காக இலங்கை மின்சார சபைக்கு 2 மில்லியனுக்கும் அதிகமான தொகையை செலுத்தத் தவறியதன் மூலம் இந்த நாட்டு மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்கக் கோரி சட்டத்தரணி ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இந்த மனுவை சட்டத்தரணி விஜித குமார தாக்கல் செய்துள்ளார்.

இதில் இலங்கை மின்சார சபை உள்ளிட்ட ஒரு குழு பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தது.

இந்த மனு நேற்று முன்தினம் தலைமை நீதிபதி பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் நீதிபதி அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்த தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் அசாதாரண நடவடிக்கை இலங்கையில் பொதுமக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும் என்று நீதிமன்றத் தீர்ப்பைக் கோரி சட்டத்தரணி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசியமட்ட கோலூன்றிப்பாய்தலில் யாழ்ப்பாணக்கல்லூரி மாணவிகள் சாதனை





93 ஆவது தேசிய மட்ட சிரேஷ்ட சேர் ஜோன் ராபெற் தடகள போட்டிகள் கொழும்பு தியகம சர்வதேச விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 18 வயது பெண்கள் பிரிவினருக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் யாழ்ப்பாணக்கல்லூரி மாணவி ஜெ.ரூபிகா 2.70 மீற்றர் வரை உயரம் பாய்ந்து தங்கப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார். அத்தோடு இரண்டாமிடத்தினை அதே கல்லூரி மாணவியான கு.வைஷ்ணவி பெற்றிருந்தார். இவர் 2.70 மீற்றர் வரை உயரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (3)

## பி.சி.சி.ஐ தலைவர் பதவியில் நான் போட்டியிடவில்லை
## சச்சின் டெண்டுல்கர்



இந்திய கிரிக்கெட் வாரியத்தின் (பி.சி.சி.ஐ.) தலைவராக ரோஜர் பின்னி கடந்த இரண்டு ஆண்டுகளாக பதவி வகித்து வந்தார். இந்த நிலையில் அவருக்கு சமீபத்தில் 70 வயது பூர்த்தியடைந்தது. பி.சி.சி.ஐ விதிகளின்படி, 70 வயதைக் கடந்தவர்கள் நிர்வாகப் பதவிகளில் நீடிக்க முடியாது என்பதால், அவர் தனது பதவியிலிருந்து விலகினார்.

இதனிடையே பி.சி.சி.ஐ இன் புதிய தலைவராக இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் நியமிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியானது. இந்திய கிரிக்கெட் வாரியத்தின் 94 ஆவது ஆண்டு பொதுக்குழு கூட்டம் மும்பையில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் வருகிற 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதில் சச்சின் போட்டியின்றி தலைவராக தேர்வு செய்யப்படவுள்ளதாகவும் செய்திகள் தெரிவித்தன.

இந்நிலையில் பி.சி.சி.ஐ தலைவராக தாம் பொறுப்பேற்க போவதில்லை என்று சச்சின் தெரிவித்துள்ளார். அத்துடன் ஊடகங்களில் காணப்படும் செய்திகள் அனைத்தும் பொய்யானவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சச்சினின் நிர்வாகக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பிசிசிஐ) தலைவர் பதவிக்கு சச்சின் டெண்டுல்கர் பரிசீலிக்கப்படுவது அல்லது பரிந்துரைக்கப்படுவது குறித்து சில அறிக்கைகள் மற்றும் வதந்திகள் பரவி வருவது எங்கள் கவனத்திற்கு வந்துள்ளது. அத்தகைய முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பதை நாங்கள் திட்ட வட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## ஆசியக் கிண்ணத்தொடர்
## லிட்டன் தாஸ் அதிரடி ஆட்டத்தால் ஹொங்கொங்கை வீழ்த்தியது பங்களாதேஷ்



ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடரின் 3ஆவது லீக் போட்டி அபுதாபியில் நடைபெற்றது. இதில் பங்களாதேஷ், ஹொங்கொங் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய ஹொங்கொங் அணி 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 143 ஓட்டங்கள் எடுத்தது. நிசாகத் கான் 42 ஓட்டங்களும், ஜீஷன் அலி 30 ஓட்டங்களும், யாசிம் முர்தசா 28 ஓட்டங்களும் எடுத்தனர்.

பங்களாதேஷ் சார்பில் தஸ்கின் அகமது, ரிஷாத் ஹொசைன், தன்ஷிம் ஹசன் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து. 144 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் களமிறங்கியது. பர்வேஸ் ஹொசைன் 19 ஓட்டங்களும், தன்சித் ஹசன் 14ஓட்டங்களும் எடுத்தனர்.

3ஆவது விக்கெட்டுக்கு லிட்டன் தாஸ்,தவ்ஹித் ஹிருதோய் ஜோடி இணைந்தது. இந்த ஜோடி பொறுப்புடன் ஆடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது.

அதிரடியாக ஆடிய லிட்டன் தாஸ் அரை சதம் கடந்து 59 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.


இறுதியில், பங்களாதேஷ் 17.4 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 144 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. தவ்ஹித் ஹிருதோய் 35 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். (3)

## ஆசியக் கிண்ணத் தொடரில் யாதவ் மாபெரும் சாதனை

17 ஆவது ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் டுபாயில் அரங்கேறிய 2ஆவது லீக்கில் நடப்பு சம்பியனான இந்திய அணி, ஐக்கிய அரபு அமீரகத்தை எதிர் கொண்டது. இதில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய கப்டன் சூர்ய குமார் யாதவ் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு அமீரக அணி இந்திய பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் விக்கெட்டுகளை கொத்தாக இழந்தது. வெறும் 13.1 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த ஐக்கிய அரபு அமீரக அணி 57ஓட்டங்களில் சுருண்டது. இந்திய தரப்பில் 2.1ஓவர்கள் வீசி 7 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்த குல்தீப் யாதவ் 4 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார்.

இதன் மூலம் ஆசிய கோப்பை ரி- 20 வடிவத்தில் சிறந்த பந்துவீச்சை பதிவு செய்த 2ஆவது வீரர் என்ற மாபெரும் சாதனையை குல்தீப் யாதவ் படைத்துள்ளார். இந்த பட்டியலில் புவனேஸ்வர் குமார் 4 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுகள் கைப்பற்றி முதலிடத்தில் உள்ளார். (3)




## மீண்டும்...

கொழும்பிலுள்ள விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறியது தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிங்கக் கொடியின் நிழலின் கீழ் உள்ள இந்த ஒற்றை தாய்நாட்டிற்கு யாரேனும் துரோகம் செய்தால், எந்தவொரு துன்புறுத்தல்களுக்கு மத்தியிலும் நான் எழுந்து நிற்பேன்.

கிருவப்பத்துவவிலுள்ள மகிந்த ராஜபக்ஷவுக்கு அரசியல் அச்சுறுத்தல்களும், இடி முழக்கங்களும் நன்கு பழக்கப்பட்டவை. மகிந்த ராஜபக்ஷ விஜேராமவில் இருந்தாலும் தங்கல்லையில் இருந்தாலும் மகிந்த ராஜபக்ஷதான் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் மிகக் குறுகிய காலத்தில் மக்களால் நாளுக்கு நாள் வெறுக்கப்படும் ஒரு குழு, தங்கள் இயலாமையை மறைக்க ஊடகங்கள் முன் செய்த அந்த அறிக்கைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியம் எனக்கு இருக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ள அவர்,

மகிந்த ராஜபக்ஷவாகிய நான் சட்டத்திற்கும் என் மக்களுக்கும் முன்னால் மட்டுமே தலை வணங்குவேன் என்றும் இன்று நாட்டில் அரச பயங்கரவாதம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக் கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண்வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக் கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தபட்ட பிரச்சனை தீர, தைராய்டு பிரச்சனை தீர எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் என்பன வழங்கப்படும்.

பயிற்சிகளை 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலரும் பங்குபெறலாம். பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே.சுப்பிரமணி அவர்கள் வழங்குவார்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)


## பொதுச்சபைக்கூட்டம் 2025

காலம் : 14.09.2025
நேரம் : மு.ப 10.30 மணி
இடம் : கரவெட்டிப்பிரதேச கால்நடை வைத்தியநிலையம்

**தலைவர்**
திரு.பு.இராதாகிருஸ்ணன்
**பிரதம விருந்தினர்**
திரு.கிறகோரி.சந்திரசேகரன்
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)
**சிறப்பு விருந்தினர்கள்**
Dr.S.சுகிர்தன்(கால்நடை வைத்திய அதிகாரி)
திருமதி.பி.சுகிர்தா (கூ.அ.உத்தியோகத்தர்)
திரு.சி.சிவபாலன் (கூ.அ.உத்தியோகத்தர்–2021ம் ஆண்டு கணக்காய்வாளர்)
திரு.சோ.தங்கேஸ்வரன் (கூ.அ.உத்தியோகத்தர்–2021ம் ஆண்டு கணக்காய்வாளர்)
திரு.அ.சஞ்சயன் (கூ.அ.உத்தியோகத்தர்–2022ம் ஆண்டு கணக்காய்வாளர்)
திரு.பொ.கோகுலன் (கூ.அ.உத்தியோகத்தர்–2023ம் ஆண்டு கணக்காய்வாளர்)
திருமதி சி.பிருந்தா (கூ.அ.உத்தியோகத்தர்–2023ம் ஆண்டு கணக்காய்வாளர்)

நிகழ்ச்சி நிரல்
மௌன இறைவணக்கம்
மங்கள விளக்கேற்றல்
1. நிகழ்ச்சிநிரல் அங்கீகரித்தல்
2. தலைமையுரை
3. சென்ற பொதுச்சபைக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
4. எண்பார்வை அறிக்கை சமர்ப்பித்தல் (2021.2022.2023)
5. உத்தேச வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பித்தல் (2026)
6. பிரேரணைகள்
   1. பொதுச்சபைப்பிரதிநிதிகளின் பிரேரணைகள்
   2. இயக்குனர்சபையினரின் பிரேரணைகள்
7. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் உரை
8. கடிதங்கள்
   1. திணைக்களம்
   2. பொது
9.நன்றியுரை

குறிப்பு:- இத்துடன் நிதி நிலவரக்கூற்று, வருமானவிபரக்கூற்று, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் மீளாய்வு அறிக்கை என்பன இணைக்கப்பட்டுள்ளது. இம் மேற்குறிப்பிட்ட கணக்கறிக்கை தொடர்பான மேலதிக விரிவான விபரங்களினை அலுவலகக் கடமைநாட்களில் பார்வையிட முடியும். எமது சங்கத்தின் அனைத்துக் கிளை நிலையங்களிலும் கணக்காய்வுச் சுருக்க அறிக்கையானது பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

தலைவர் — திரு.பு.இராதாகிருஸ்ணன்
(C-3823)
செயலாளர் — திரு.பா.பிரதீபன்


# சங்கானை பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவை

(அராலி)

கிறீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகமும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சங்கானைப் பிரதேச செயலகத்தில் காலை 8.30 தொடக்கம் மாலை 3 மணிவரை இடம் பெறவுள்ளது.

இதன்போது ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக் களத்தினால் வழங்கப்படும் சேவைகள், ஓய்வூதியம் தொடர்பான சேவைகள், பிறப்பு, இறப்பு மற்றும் உத்தேச வயது சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள், மோட்டார் வாகன பதிவு மற்றும் வாகன வருமான அனுமதிப்பத்திரம் தொடர்பான சேவைகள், பிரதேச சபைகளால் வழங்கப்படும் சேவைகள், பொலிஸ் திணைக் களத்தினால் வழங்கப்படும் சேவைகள், மனிதவள அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழில் வழிகாட்டல்கள், திறன் அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழிற்கல்வி வழிகாட்டல்கள், சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள், முதியோர் தேசிய செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகள், காணி தொடர்பான சேவைகள் மற்றும் மருத்துவ முகாம் - பொது மருத்துவ பரிசோதனை, கண்புரை பரிசோதனை , இலவச மூக்குக்கண்ணாடி வழங்குதல் (வறியவர்களுக்கு) போன்ற சேவைகள் இந்த நடமாடும் சேவையின்போது வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-104)

# மானியமாக சீருடைத்துணி வழங்க சீனா இணக்கம்

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டுக்காக பாடசாலை சீருடை துணிகளை மானியமாக வழங்க சீன அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

அதன்படி அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற பாடசாலைகளைச் சேர்ந்த 44 இலட்சத்து 18 ஆயிரத்து 404 மாணவர்களுக்கு 2026 ஆம் ஆண்டுக்கான சீருடைகளை வழங்குவதற்கான ஒப்பந்தச் சான்றிதழ்களை பரிமாறிக் கொள்ளும் அதிகாரப்பூர்வ விழா நேற்று முன்தினம் பத்தரமுல்லை - பெலவத்தையில் உள்ள கல்வி அமைச்சில் நடைபெற்றது.


கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன மற்றும் சீனத் தூதுவர் கி ஸென்ஹோங் ஆகியோர் இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கினர்.

இந்த ஒப்பந்தம் தொடர்பான சான்றிதழ்கள் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ மற்றும் சீனத் தூதுவர் கி ஸென்ஹோங் ஆகியோரிடையே பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய கல்வி மற்றும் உயர் கல்வி பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன, '2025 ஆம் ஆண்டுக்காக சீனா இலங்கைக்கு ரூ.5.17 பில்லியன் மதிப்பிலான 11.82 மில்லியன் மீற்றர் சீருடை துணியை நன்கொடையாக வழங்கி, 4.6 மில்லியனுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பயனளித்துள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கும் இதேபோன்ற பங்களிப்பை வழங்கும் சீனாவின் உறுதி, இரு நாடுகளின் நட்பை மேலும் வலுப்படுத்தும்' என குறிப்பிட்டார். (நி)

# தனிமையில் நின்ற யானை உயிரிழப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி உருத்திரபுரம் நீவில் பகுதியில் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்ட நிலையில் தனிமையில் நின்ற யானை உயிரிழந்தது.

கடந்த இருநாட்களுக்கு முன்பு உருத்திரபுரம் பகுதியில் குளக்கரையில் குறித்த யானை தனித்து நின்றதை அவதானித்த பிரதேச மக்கள் கிராம சேவகர் மற்றும் வனஜீவராசிகள் திணைக் களத்திற்கு தெரியப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-316)

# இராசிபலன்

13.09.2025
ஆவணி 28, சனிக்கிழமை
சஷ்டி முற்பகல் 11.38 மணிவரை

கார்த்திகை பிற்பகல் 2.58 மணிவரை
சுப நேரம் 3.03-4.33 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை

கபில சஷ்டி, கிருஷ்ண ஜெயந்தி
சந்திராஷ்டமம்: சித்திரை, சுவாதி

**வளவன்**




பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூல முண்டு.




மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.




பிள்ளைகளின் நீண்ட நாளைய தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.




எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம், தேக நலனில் அக்கறை தேவை, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.




பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.




வியாபார விரோதம் விலகும், கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போட்டிகளில் முன்னேற்றம் காணும் நாள்.




பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, பகை விலகி பாசம் கூடும் நாள்.

**உன்னை அறிவதால் மட்டுமே உனக்கு மகிழ்ச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதியற்ற கட்டடத்திற்கு 49 இலட்சம் விலக்களிப்பு

## வவுனியா மாநகர சபை அமர்வில் சுட்டிக்காட்டு

(வவுனியா)

**வவுனியா, வெளிக்குளம் பகுதியில் உள்ள அனுமதி அற்ற கட்டடம் ஒன்றிற்கு 49 இலட்சம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்ட நிலையில் அந்த தொகையை செலுத்த தேவையில்லை என நகர அபிவிருத்தி அதிகாரசபை விலக்களிப்பு வழங்கியதாக வவுனியா மாநகரசபை அமர்வில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.**

வவுனியா மாநகரசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சு.காண்டீபன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே சபையில் சுட்டிக் காட்டப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த முதல்வர் அந்த பகுதியில் கடந்த 2019 ஆம் ஆண்டு அனுமதி இல்லாமல் அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக 49 இலட்சம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. எனினும் அந்த தொகையை செலுத்த தேவையில்லை என நகர அபிவிருத்தி அதிகாரசபையால் அந்த காலப்பகுதியில் விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. எந்த அடிப்படையில் அது வழங்கப்பட்டது என கூறுமாறு மாநகர முதல்வர் என்ற வகையில் எனக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

எனவே இது தொடர்பாக சபையின் கவனத்திற்கு கொண்டு வருவதுடன் சபை தீர்மானம் ஒன்றை எடுத்து இதனை ஆராய்வதற்கான நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக தீர்மானம் தேவையில்லை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் விளக்கம் ஒன்றை கோரி சபை முதல்வரே அடுத்தகட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என உறுப்பினர்களான முகமட் முனவ்வர் மற்றும் சு.விஜய குமார் ஆகியோர் தெரிவித்தனர்.

உரிய நபர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சென்றால் நாமும் போகமுடியாது. எனவே முழுச்சபையும் இதற்கு பொறுப்பல்ல என்று உறுப்பினர் முனவ்வர் இதன்போது தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக சபை முதல்வருக்கும் குறித்த இரு உறுப்பினர்களும் இடையில் நீண்ட வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றது.

இந்த நிலையில் சபைத் தீர்மானமாக இல்லாமல் எந்த அடிப்படையில் இந்த கட்டண விலக்களிப்பு வழங்கப்பட்டது என்பது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் விளக்கம் கோருவதற்கு முதல்வருக்கு சபை உறுப்பினர்களால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. (8-250)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் குழுவினர் இரணைமடுக்குளத்திற்கு விஜயம்



ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் Takafumi Kadono உள்ளிட்ட குழுவினர் இரணைமடுக்குளத்திற்கு நேற்று முன்தினம் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் அமைக்கப்பட்ட இரணைமடுக்குளம் மற்றும் இரணைமடுக்குள ஏற்று நீர்ப்பாசன திட்டத்தை பார்வையிட்டு அவற்றின் மூலம் விவசாயிகள் பெறும் பயன்கள் தொடர்பாக ஆராய்ந்தனர்.

குறித்த விஜயத்தின் போது வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ வடமாகாண பொறியியல் பிரிவின் பிரதிப் பிரதம செயலாளர் எந்திரி என்.சுதாகரன், வடமாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி த.இராஜகோபு, கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் கே.கருணாநிதி, கிளிநொச்சி கிழக்கு பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர் கே.பிரகாஸ் உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகளும் இரணைமடுக்குள கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன தலைவர், திருவையாறு ஏற்று நீர்ப்பாசன விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (8-316)

# நீர் வடிகால்களை தூய்மைப்படுத்தும் செயற்றிட்டம் ஆரம்பம்

(கரணவாய்)

பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட பிரதான வீதியோரமாக அமைக்கப்பட்டுள்ள மழை வெள்ள நீர் வடிகான்கள் துார்வாரும் பணியில் இரண்டாம் கட்டமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து நகர சபை தொழிலாளர்களினால் கடந்த நாட்களில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பருத்தித்துறை நகரில் காணப்படும் குறித்த வடிகான்கள் நீண்ட காலமாக துார்வாரப்படாது இருந்து வந்துள்ளது.

பருவமழை அண்மித்துள்ள நிலையில் மழை வெள்ள நீர் தடையின்றி வடிந்தோடும் வகையில் நகரசபையினால் துார்வாரும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன்போது பருத்தித்துறை நகரபிதா டக்ளஸ் போல் நேரடியாக பார்வையிட்டு துார்வாரப்படும் சேற்று மண் உள்ளிட்ட கழிவுகளை உடனுக்குடன் அங்கிருந்து அகற்றுவதற்கு அறிவுறுத்தல்களை வழங்கி மேற்பார் [illegible] தக்கது. [illegible]

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

யா/வலி/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி

கா.வேதாஷியா-179, த.கேனுயன்-162, ம.அபிசனா-145, அருளானந்தன் சாமுவேல் எபநேசர்-143, த.யசிக்கா-140, சி.அக்ஷயா-136, சு.றதீஸ்-136, த.அக்ஷரா-78

# புலமைப்பரிசில் பரீட்சை தத்வார்த்தன் சாதனை

(அராலி)

2025 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் 141 புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் தனது ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அரங்கநாதன் தத்வார்த்தன் என்ற மாணவனே இவ்வாறு சாதனை படைத்துள்ளான். (8-104)

# ஒன்றுகூடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவின் 100 ஆவது அவதார தினத்தை முன்னிட்டு ஸ்ரீ சத்தியசாயி வெளிநாட்டு நிறுவனம் இலங்கையின் வட பிராந்திய இணைப்புக்குழுவினால் பாலவிஹாஸ் மாணவர் பெற்றோர் ஒன்றுகூடல் நிகழ்வு மானிப்பாய் சோதி வேம்படி வீதியிலுள்ள ஸ்ரீ சத்திசாயி பாடசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பாலவிஹாஸ் மாணவர்களின் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதுடன் நிகழ்வின் பிரதம விருந்தினராக கனடா ஸ்ரீ சத்திய சாயி குளோபஸ் கவுன்சிலின் தலைவர் ஸ்ரீமதி . அருணா சுவேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 250 | 200-300 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 200 | 180 | 240 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 150 | 120 | 200 |
| தக்காளி | 200 | 200 | 150 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 230 | 200 |
| கோவா | 250 | 280 | 250 | 220 | 300 |
| கரட் | 300 | 330 | 300 | 260 | 400 |
| பூசணி | 60 | 60 | 50 | 50 | 60 |
| புடோல் | 100 | 200 | 150 | 100 | 200 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-350 | 250 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 150 | 150 | 160 |
| பாகற்காய் | 400 | 500 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 120 | 150 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 350 | 400 | 300 | 350 | 600 |
| லீக்ஸ் | 250 | 200 | 300 | 180 | 200 |
| பீற்றூட் | 150 | 100 | 200 | 100 | 150 |
| கறிமிளகாய் | 400 | 300 | 300 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 300 | 280 | 300 |
| போஞ்சி | 400 | 500 | 350 | 350 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 300 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 40-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 600 | 800 | 600 | 1050 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 120-200 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 700 | 600 | 400 | 1200 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 300 | 150 | 400 |
| முள்ளங்கி | 150 | 160 | 150 | 100 | 240 |
| பொன்னாங்காணி | 120 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 50 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடியில் ஈடுபடுவோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்

## மன்னார் நகரசபை முதல்வர்

(மன்னார்)—

**மன்னார் நகர சபையில் இடம்பெற்ற ஊழல் குறித்து விசாரணைகள் மிக வேகமாக இடம்பெற்று வருகின்றது. விசாரணைக் குழுக்களும் வருகை தந்து விசாரணை களை மேற்கொண்டுள்ளது.மிக விரைவில் ஊழல் மோசடியில் ஈடுபட்ட நபர்கள் சட்டத்தினால் தண்டிக் கப்படும் நிலை ஏற்படும் என மன்னார் நகரசபை முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்தார்.**

மன்னாரில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப் பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

மன்னார் நகர சபையினால் பல்வேறு விசேட தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது.மன்னாரில் ஞாயிறு தினங்களில் காலை முதல் மதியம் 2 மணி வரை தனியார் வகுப்புக்கள் நிறுத் தப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. குறித்த தீர்மானம் நடை முறைப்படுத்தப்படுகின்றது.

மன்னார் நகரத்தில் போக்கு வரத்தை இலகுபடுத்துவதற் காக புதிய நடைமுறைகளை அமுல் படுத்துகின்றோம். போக்குவரத்தை ஒழுங்குபடுத் துவதற்காக மன்னார் நக ரத்தில் பஸ் போக்குவரத்து சபை மற்றும் தரிப்பிடத்தில் பல மாற்றங்களை கொண்டு வந்திருக்கின்றோம். பல இடங் களில் ஒரு வழிச்சாலையாக வும், வாகனங்களை தரித்து நிறுத்துவதற்காக பல இடங் களை அடையாளப்படுத்தி இருக்கிறோம்.

மேலும் மன்னார் நகர சபைக்குட்பட்ட காணிகளை எல்லைப்படுத்தி அந்த காணி களை துப்புரவு செய்து எல்லைப்படுத்தவதற்கான தீர் மானத்தை எடுத்துள்ளோம்.

மேலும் மன்னார் நகரத் தில் எவ்வித மணல் அகழ்வு களையும் இடம்பெற அனு மதிப் பதில்லை என தீர்மானிக் கப்பட்டுள்ளது. எவ்விதத்திலும் அகழ்வுக்கு அனுமதி வழங்கு வதில்லை என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நகரத்தை சுத்தமாக வைத் திருப்பதற்காக எமது பஸ் தரிப்பு நிலையத்தில் வெற்றிலை எச்சில் துப்புதல்,புகைத்தல், முற்றாக தடை செய்யப்பட்டுள் ளது.

மேலும் பொது இடங்களில் சிறுநீர் கழித்தலும் தடை விதிக் கப்பட்டுள்ளது.தொடர்ந்தும் கட்டுப்பாடு களை விதிப்போம். மக்கள் அதனைக் கடைப்பிடிக்க வேண்டும் .

எதிர்வரும் வாரம் பொலி ஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து மன்னார் நகரத்தில் அடாவடி தனத்துடன் மக்களின் போக்கு வரத்து பாதைகளுக்கு இடை யூறை ஏற்படுத்தி வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வர்த் தகர்களுக்கு எதிராக சட்ட நட வடிக்கை எடுக்கப்படும்.என அவர் மேலும் தெரிவித் தார். (8-285)

# சர்வதேச தற்கொலை தடுப்பு தினம் மன்னாரில் அனுஷ்டிப்பு

(மன்னார்)

சர்வதேச தற்கொலை தடுப்பு தினம் ஆண்டு தோறும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை உளநல அணியின ரால் தற்கொலைக்கு எதிரான விழிப் புணர்வு நடைபவனி கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது.

மன்னார் பொது வைத்திய சாலை யில் இருந்து மன்னார் நகரப்பகுதி முழுவதுமாக தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வு பதாதைகளை ஏந்திய வாறு மன்னார் மாவட்ட சுகாதார நிலைய ஊழியர்கள் , வைத்தியசாலை பணிப் பாளர், பிரதிப்பணிப்பாளர் மற்றும் இளைஞர் படையணியினரும் கலந்து கொண்டு பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தனர்.



குறித்த நடைபவனியை தொடர்ந்து மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் அமைக்கப்பட்ட இளைஞர் ஜெவன சுகாதார நிலைய திறப்பு விழா நிகழ்வும் இடம்பெற்றது.

குறித்த நிலையத்தின் ஊடாக மாவட்ட ரீதியாக தற்கொலை எண் ணிக்கையை குறைத்தல்,தற்கொலை முயற்சியாளர்களை கண்காணித்தல் உட்பட பல்வேறு உளநல கண்காணிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (8-285)


# கும்பழாவளைப்பிள்ளையார் அடியவர்களுக்கான தாழ்மையான அவசர வேண்டுகோள்

அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் கோயில் பெயரை பயன்படுத்தி சிலர் சட்டவிரோத நிதி சேகரிப்பில் ஈடுபடுவதாக கும்பழாவளைப்பிள்ளையார் அடியார்கள் ஆலய தர்மகர்த்தாக்கள் சபையினரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். ஆலய நிர்வாகம் எந்தவொரு தனிநபருக்கோ அல்லது அமைப்பிற்கோ ஆலய பெயரை பயன்படுத்தி நிதிசேகரிப்பில் ஈடுபட அனுமதி வழங்கவில்லை என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். ஏற்கனவே நிதிமோசடி தொடர்பான குற்றச்சாட்டு விசாரணை யிலிருப்பதால் அடியார்கள் இவ்விடயத்தில் விழிப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் கும்பழாவளை பிள்ளையாருக்கு நிதி அன்பளிப்பு செய்யவிரும்பும் அடியார்கள் ஆலய அலுவலகத்தில் அதனை வழங்கி தவறாது பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளுமாறும் அத்துடன் பொருட்களை அன்பளிப்பாக வழங்க விரும்புவோர் அதனை கொள்வனவு செய்யமுன்னர் எழுத்துமூலமான கோரிக்கையினை ஆலய அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டு நிற்கின்றோம்.

**தர்மகர்த்தாக்கள் சபை,**
**அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் கோயில்,**
**அளவெட்டி.**

(5401)



# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

## 79, காட்டுப்புலம் ஒழுங்கை, வட்டாரம் - 06

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம் 06. காட்டுப்புலம் ஒழுங்கையிலுள்ள இல: 79. ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **தெய்வானைப்பிள்ளை** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **சங்கரப்பிள்ளை முருகையா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் 634/12.02.2003ஆம் இலக்க உறுதியால் **அருணாசலம் குருசாமி கைம்பெண் சொர்ணலட்சுமி** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சுப்பிரமணியம் தருமரத்தினம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.சிவலிங்கம் முகதாவில் 168/23.12.2009ஆம் இலக்க உறுதியால் குறித்த **சங்கரப்பிள்ளை முருகையா** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **சுப்பிரமணியம் தருமரத்தினராசா** ஆகியவர் மேற்படி 168ஆம் இலக்க உறுதியில் கொள்வனவாளரின் பெயர் "சுப்பிரமணியம் தருமரத்தினராசா" என்பதற்கு பதிலாக "சுப்பிரமணியம் தருமரத்தினம்" என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டு விட்டதாகவும். குறித்த கொள்வனவாளரின் பெயரை சுப்பிரமணியம் தருமரத்தினராசா என்று சரியாக மாற்றம் செய்வதாகவும் குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு மு.சிவலிங்கம் முகதாவில் 205/30.12.2010ஆம் இலக்கத்தில் திருத்தல் உறுதியொன்றினை நிறைவேற்றியிருந்தார்கள்.

குறித்த **சுப்பிரமணியம் தருமரத்தினராசா மறுநாமம் தர்மரத்தினராசாவும் பெண் மீராலினியும்** ஆகியவர்கள் குறித்த 634ஆம் இலக்க உறுதியில் அதன் தாயுறுதி விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லையென்றும். அப்போது நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலைகளால் தாயுறுதி பற்றிய விபரங்களைத் தேடிப்பெற்றுக்கொள்ள இயலவில்லை என்றும். ஆயினும் யாழ் காணிப்பதிவக Index எனப்படும் புத்தகத்தில் உள்ள அதன் விபரங்கள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளன எனவும். அதன்படி குறித்த ஆதனமானது சங்கரப்பிள்ளை மகள் தெய்வானைப்பிள்ளை என்பவருக்குச் சொந்தமாக இருந்ததென்றும். அவர் அதனை யாருக்கும் கையளிக்காமல் காலஞ்சென்றுபோக அவரின் சகோதரியான சொர்ணலட்சுமி தனது சகோதரனான குறித்த சங்கரப்பிள்ளை முருகையா என்பவருக்கு தனது சகோதரவழி உரிமைப்பங்கை யும் சேர்த்து குறித்த 634ஆம் இலக்க உறுதியால் நன்கொடையளித்திருந்தார் என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு நன்னியன் தம்பிமுத்தன் முகதாவில் 13527/15.03.2025ஆம் இலக்கத்தில் உரித்து வரலாறு வெளிப்படுத்தல் உறுதி யொன்றினை நிறைவேற்றியிருந்தார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர் : **"சோனகநாவல்"**
இறை : **சங்கானை கிழக்கு**
விஸ்தீரணம் : **நில.பர.இல 07 குழி 06.58**
எல்லைகள் : **கிழக்கு** - வழிவாய்க்காலுடன் கூடிய ஒழுங்கை. **வடக்கு** - தம்பிமுத்து தனபாலசிங்கத்தின் ஆதனம். **மேற்கு** - தம்பையா அழகரத்தினத்தின் ஆதனம். **தெற்கு** - கந்தையா சபாநாயகத்தின் ஆதனம்.

குறித்த **சுப்பிரமணியம் தர்மரத்தினராசாவும் பெண் மீராலினியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய **ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சுப்பிரமணியம் தர்மரத்தினராசாவும் பெண் மீராலினியும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

(5389)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்க அணி திரளும் அரபு நாடுகள்

## அழைப்பு விடுத்தது கட்டார்

**(கட்டார்)**

**"இஸ்ரேலால் ஒட்டுமொத்த வளைகுடாவும் அபாயத்தில் இருக்கிறது. இஸ்ரேலின் அட்டூழியம் மற்றும் காட்டுமிராண்டித்தனம் தொடர்வதைத் தடுக்க விரைவில் நடவடிக்கை எடுக்க அரபு - இஸ்லாமிய உச்சி மாநாடு நடைபெறும்.**

**அதில் இஸ்ரேல் மீதான பதிலடி தாக்குதல் குறித்து முடிவெடுக்கப்படும்" என்று கட்டார் பிரதமர் அப்துல் ரஹ்மான் அல் தானி தெரிவித்தார்.**



காசாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து விவாதிக்க ஹமாஸ் அரசியல் தலைவர்கள் கட்டார் தலைநகர் டோஹாவில் கடந்த செப்டம்பர் 9 அன்று கூடியிருந்தனர்.

அப்போது, இஸ்ரேல் போர் விமானங்கள் திடீரென கட்டாரில் ஹமாஸ் அலுவலகம் மீது வான் வழித் தாக்குதல் நடத்தின.

இதில், ஹமாஸ் தலைவர்கள் உயிர்தப்பினர்.

ஆனால், 5 ஹமாஸ் உறுப்பினர்களும், ஒரு கட்டார் பாதுகாப்புப்படையினரும் கொல்லப்பட்டனர்.

அமைதி திரும்ப மத்தியஸ்தம் செய்த நாடு மீதே இஸ்ரேல் நடத்திய தாக்குதலை ஐ.நா, இந்தியா, ஈரான், சவுதி அரேபியா ஆகியவை கண்டித்தன.

இந்தத் தாக்குதல் கோழைத்தனமானது என கட்டார் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் முன்னதாக கண்டித்திருந்தார்.

இந்நிலையில் தாக்குதல் குறித்து அந்நாட்டு பிரதமர் அப்துல் ரஹ்மான் அல் தானி நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது பேசிய அவர், தாக்குதல் நடைபெற்ற அன்று காலை நான் பிணைக் கைதி ஒருவரது குடும்பத்தினருடன் பேசினேன்.

அவர்கள் அமைதிப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து கவனிக்கின்றனர்.

ஆனால், தாக்குதலின் மூலம் நெதன்யாகு அந்தப் பிணைக் கைதிகளுக்கான அனைத்து நம்பிக்கையையும் கொன்றுவிட்டார் எனத் தெரிவித்தார். (நி)

## மெக்சிக்கோவில் எரிவாயு கொள்கலன் விபத்து
# 8 பேர் பலி, 90 பேர் காயம்

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோ தலைநகர் மெக்சிக்கோ சிட்டிக்கு அருகிலுள்ள அதிவேக நெடுஞ்சாலையில், எரிவாயு கொள்கலன் ஒன்று வெடித்துச் சிதறியதில், குறைந்தது 8 பேர் உயிரிழந்துள்ளதுடன், 90இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

கட்டுப்பாட்டை இழந்த எரிவாயு கொள்கலன், நெடுஞ்சாலையில் கவிழ்ந்து வெடித்தது. இந்தத் தீ விபத்தில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த சுமார் 28 வாகனங்கள் முழுவதுமாக எரிந்து நாசமாகின.

விபத்தில் சிக்கிய 90 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

அவர்களில் பலர் பலத்த தீக்காயங்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து இடம்பெற்ற இடத்திற்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

மீட்புப் படையினர் காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (நி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீனம் என்று எதுவுமில்லை இந்த நிலம் எங்கள் சொந்தம்

## நெதன்யாகு அதிரடி



**(ஜெருசலேம்)** இனி பாலஸ்தீன நாடு என்ற ஒன்று இல்லை, அந்த நிலம் தங்களுக்கு சொந்தம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்தின் மேற்கு கரையில் மேலும் இஸ்ரேலிய குடியேற்றத்தை விரிவுபடுத்தும் சர்ச்சைக்குரிய E1 குடியேற்ற விரிவாக்க திட்டத்தில் நேற்று முன்தினம் நெதன்யாகு கையெழுத்திட்டார். அத்துடன் மேலும் மேற்கு கரையில் மாலே அடுமிம் குடியேற்றத்தை நேரில் பார்வையிட்டார்.

இதன் பின் பேசிய நெதன்யாகு, "எங்கள் வாக்குறுதிகள் நிறைவேறி வருகின்றன. இனி பாலஸ்தீன நாடு இல்லை. இந்த நிலம் எங்களுடையது மட்டுமே.

இங்கு இன்னும் ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்படும். நமது கலாசாரம், நிலம் பாதுகாக்கப்படும்.

மேற்குக் கரையின் மக்கள் தொகை இரட்டிப்பாகும். இங்கு பல சிறந்த விடயங்கள் நடக்கும்" எனத் தெரிவித்தார்

மேற்குக் கரையின் மாலே அடுமிம் பகுதியில் உள்ள குடியிருப்புகளை ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலேமுடன் இணைக்கும் இந்தத் திட்டம், கிழக்கு ஜெருசலேமிலிருந்து உள்ள பாலஸ்தீனியர்களிடமிருந்து மேற்குக் கரையை முற்றிலுமாகத் துண்டிக்கும்.

சர்வதேச அழுத்தத்தால் பல ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த E-1 திட்ட பணிகள் கடந்த மார்ச் மாதத்தில் தொடங்கியது.


பாலஸ்தீனியர்களுக்காக பிரத்தியேகமாக வடக்கு மற்றும் தெற்கு மேற்குக் கரைகளை இணைக்கும் சாலையை அமைக்கும் திட்டத்தை இஸ்ரேல் இதன் மூலம் தொடங்கியது.

இது பாலஸ்தீனியர்கள் பிரதான நெடுஞ்சாலையில் நுழைவதைத் தடுக்கும்.

தற்போதைய நிலவரப்படி, மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருசலேமில் உள்ள 300 சட்டவிரோத குடியிருப்புகளில் சுமார் 700,000 இஸ்ரேலிய குடியேறிகள் உள்ளனர். (நி)

---

## ஏமன் மீது இஸ்ரேல் தாக்குதல் 35 பேர் உயிரிழப்பு



(சனா)

ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செயற்பட்டு வரும் நிலையில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து ஏமன் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாலஸ்தீனத்தின் காசா முனை மீதான இஸ்ரேலின் போரை கண்டித்து, அந்நாட்டின் மீது 2023 முதல் ஹவுதி கிளர்ச் சியாளர்கள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இதற்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது.

இந்த நிலையில் ஏமன் தலைநகர் சனா உட்பட பல பகுதிகளில் இஸ்ரேல் படையினர் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

தலைநகர் சனாவில் உள்ள இராணுவ தலைமையகம், எரிபொருள் நிலையம் உள்ளிட்ட இடங்களில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் 35 பேர் உயிரிழந்துள்ளதோடு 130இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

சில நாட்களுக்கு முன்பு இஸ்ரேல் விமான நிலையம் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ட்ரோன் தாக்குதல் நடத்தினர்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

---

## நாசாவில் வேலை செய்ய சீனர்களுக்குத் தடை

(வோஷிங்டன்)

நாசாவில் வேலை செய்ய சீனர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசா பல்வேறு விண்வெளி ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.


இதேவேளை, விண்வெளித் துறையில் அமெரிக்கா - சீனா இடையே போட்டி அதிகரித்து வருகிறது.

சந்திரன் மற்றும் செவ்வாய் கிரகத்தை ஆராய்ச்சி செய்வதில் உலக நாடுகள் மும்முரம் காட்டி வருகின்றன.

நிலா மற்றும் செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்ப அமெரிக்கா மற்றும் சீனா தீவிரமாக வேலை செய்து வருகின்றன.

இந்நிலையில், சந்திரன் மற்றும் செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்பும் திட்டம் குறித்த விவரங்கள் சீனாவுக்கு தெரிந்துவிடக்கூடாது என்பதற்காக நாசாவில் வேலை செய்ய சீனர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாசா மையத்திற்கு சீனர்கள் வரவும், விண்வெளித் திட்டங்கள் தொடர்பான தரவுகளை அணுகவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி, முல்லை மாவட்டங்களில் 80 ஆயிரத்து 174 வெடி பொருட்கள் மீட்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான ஜப்பானிய தூதரகப் பிரதிநிதி குறுக்கோவா எறிக்கோ ஹிசாகி சுமுறா மற்றும் ஜனனி கந்தையா ஆகியோர் மனிதாபிமான கண்ணி வெடியகற்றும் பணிகளை முன்னெடுத்து வரும் ஸார்ப் நிறுவன அலுவலகம் மற்றும் முகமாலை கண்ணிவெடியகற்றி கையளிக்கப் பட்ட பிரதேசங்களின் தற்போதைய முன்னேற்ற நிலை பிரதேசத்தளம் என்பவற்றை மேற்பார்வையிட்டனர்.

இதன்போது கண்ணிவெடியகற்றப் பட்டு கையளிக்கப்பட்ட பிரதேசங்கள் தற்போது வேலை நடைபெறும் பிரதேசங்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

கண்ணிவெடியகற்றலில் ஈடுபடும் ஸார்ப் நிறுவனமானது 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2025 செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தச்சடம்பன் அம்பகாமம் ஒமுமடு மற்றும் மாங்குளம் கொக்காவில் பகுதியிலும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும் கிளாலி இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் கண்டாவளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தட்டுவன்கொட்டி பகுதியிலும் முப்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்து மூவாயிரத்து நாற்பது சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து எண்பதாயிரத்து நூற்று எழுபத்து நான்கு அபாயகரமான வெடி பொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தற்போது நான்கு அணிகள் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-315)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992- RC
நட்சத்திரம்: சுவாதி
12இல்செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Bsc,Developer (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16027

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி-பா-35 1/2
உயரம்- 5'8"
தகைமை/தொழில்-A/L, Super Market & Travels
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16028

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:பூராடம்
7இல்செவ்
உயரம்:5 1/2
தகைமை/தொழில்: B.Ed, Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16030

பிறப்பு: 1983- இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்-A/L, Australia
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16033

பிறப்பு: 1985- இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி-பா-33 1/2
12இல் செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: A/L.கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16034

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி-பா-5 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Dip in English, Aari Work
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/16046

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம் - உத்தராடம்
7இல்செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Nursing Course
எதிர்பார்ப்பு: வெளிநாடு (Canada)
தொ.இ: G/16048

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்-விசாகம்
தகைமை/தொழில்: Degree,Work
எதிர்பார்ப்பு: வெளிநாடு (Only UK)
தொ.இ: G/16050

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
7 இல் செவ்
கி.பா - 52
உயரம்: 5'4"
தகைமை/தொழில்-BSc, PHD,Data Scientist
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16051

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:அனுசம்
7இல்செவ்
கி.பா - 48
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -BSc, MSc, Project Engineer(USA)
எதிர்பார்ப்பு: Engineer,IT
தொ.இ: G/16055

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 442

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# எது என்னுடையது!

ஒரு காட்டிலே ஒரு குரு இருந்தார். அவரிடம் சந்நியாசிகள் நிறையப்பேர் இருந்தார்கள்.

ஒரு நாள் இரவு ஒரு சந்நியாசியைக் கூப்பிட்டார்.

"நீ உடனே அரண்மனைக்குப் புறப்பட்டுப் போ. அரசனின் அவையிலிருந்து அறிவைப் பெற்றுக் கொண்டு வா!" என்றார்.

"குருவே! இந்த ஆசிரமத்திலே கற்றுக்கொள்ள முடியாததையா அரண்மனையிலே கற்றுக்கொள்ளப் போகிறேன்...!" என்றார் அவர்.

"பேசாமல் நான் சொல்வதைக் கேள். மற்றதெல்லாம் அங்கே போய் அரசனைக் கேட்டுக் கொள்!" என்றார் குரு.

வேறு வழியே இல்லை.

அந்த சந்நியாசி அரண்மனைக்குப் போய் சேர்ந்தார். அங்கே போய் பார்த்தால் இவருக்கு அதிர்ச்சி. ஏன் என்றால் அங்கே எல்லோரும் மது மயக்கத்திலே நடனமாடிக் கொண்டிருந்தார்கள்.

இந்த சந்நியாசிக்கு ரொம்ப சங்கடமாய்ப் போனது.

நம் குரு இப்படி நம்மளை அவமானப்படும் படியாக ஆக்கிவிட்டுவிட்டாரே! என்று நினைத்தார்.

இருந்தாலும் அரசன் இவரை வரவேற்று உபசரித்தார்.

"நீங்கள் கண்டிப்பாக இன்றைக்கு இரவு இங்கே தங்க வேண்டும்." என்று கேட்டுக்கொண்டான்.

"இன்றைக்கு இரவு இங்கே நான் தங்குவது அர்த்தமில்லாத செயல்!" என்றார் சந்நியாசி.

இருந்தாலும் அரசன் விடுவது மாதிரித் தெரியவில்லை...!

"நீங்கள், நாளைக்குக் காலையிலே குளித்துவிட்டு சாப்பிட்டுவிட்டுப் போகலாமே!" என்றான்.

"சரி" என்று சொல்லி சந்நியாசி அங்கேயே தங்கினார்.

அன்றைக்கு இரவு அவருக்குத் தூக்கமே வரவில்லை!

"இந்த இடத்திலே நான் எப்படி ஞானத்தைப் பெற முடியும்?" என்று ஆச்சரியமாக யோசித்துப் பார்த்தார்.

காலையிலே எழுந்தவுடனே அரசன் அவரிடம் வந்தான்.

"அரண்மனைக்குப் பின்னாலே உள்ளே நதியிலே குளித்துவிட்டு வரலாம். வாருங்கள்!" என்று கூப்பிட்டார். இரண்டு பேரும் போய் அங்கே குளித்துக் கொண்டு இருந்தார்கள்.

அந்த சமயத்திலே திடீர் என்று பயங்கரக் கூச்சல். என்ன என்று பார்த்தால். அரண்மனை தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது!

அரசன் சந்நியாசியைப் பார்த்து.

"அதோ பார்த்தீர்களா..." என்று காட்டினான்.

சந்நியாசி நிமிர்ந்து பார்த்தார். வானளாவி தீப்பிழம்புகள்! அவ்வளவுதான். உடனே அரண்மனையை நோக்கி ஓட ஆரம்பித்தார்.

அடுத்து எதற்காக அங்கே ஓடுகிறீர்கள்?" என்று கேட்டார் மன்னன். அங்கே அரண்மனையிலே என்னுடைய துணி ஒன்று கிடக்கிறது. அது எரிந்துவிடப் போகிற அவசரத்திலே ஓடுகிறேன் என்று சொல்லிக்கொண்டே ஓடினார். அப்படி அவர் ஓடிக்கொண்டிருக்கும் போதே அவருக்குள்ளே ஒரு யோசனை! "ராஜாவோடு அரண்மனையே தீப்பிடித்து எரியுது. ஆனால் அவர் அங்கே நதியிலே நின்று கொண்டிருக்கிறார். ஆனால் நான்...?

என்னுடைய சின்னத்துணி ஒன்று எரிந்துவிடப் போகிறதே என்று ஓடிக் கொண்டு இருக்கின்றேன். இப்படி நினைத்த உடனே திரும்பி வந்தார். அங்கே தண்ணீரிலே நின்றுகொண்டே சிரித்துக் கொண்டிருந்தார் மன்னன். அவன் காலிலே விழுந்தார் சந்நியாசி.

அப்புறம் கேட்டார். அங்கே உங்கள் அரண்மனையே தீப்பற்றி எரியுது. நீங்கள் இப்படி நிற்கின்றீர்களே. இதை என்னாலே புரிஞ்சிக்க முடியலையே" என்றார். இப்போது அந்த அரசன் சொன்னான். நான் அந்த அரண்மனையை என்னுடையதாகக் கருதியிருந்தால் இந்நேரம் இங்கே நின்று கொண்டிருக்க மாட்டேன்.

அரண்மனை என்பது அரண்மனை. நான் பிறப்பதற்கு முன்னாலும் அரண்மனை இருந்தது. நான் இல்லாமல் போன பிறகும் அரண்மனை இருக்கும். பின்பு அது எப்படி என்னுடையதாக இருக்க முடியும்?

நீங்கள் அந்தத் துணியை உங்களுடையதாகவும் அரண்மனையை என்னுடையதாகவும் நினைக்கிறீர்கள். அதனாலே அதன் பின்னாலே ஓடுகிறீர்கள்!" என்றான். சந்நியாசிக்குத் தெளிவு ஏற்பட்டது.

மனிதன் தன்னுடைய நோக்கத்தினாலேயே அடிமையாகிறான் என்பது ஓஷோவின் கருத்து. அந்த நோக்கத்தை மாற்ற வேண்டும். இல்லை என்றால் தகர்க்க வேண்டும். அப்படி செய்தால் விடுதலை பெறமுடியும் என்கிறார் அவர்.

நம் ஆள் ஒருவனைக் கேட்டேன்.

"ஏம்பா... உங்கள் பக்கத்து வீடு தீப்பிடிச்சி எரியிது என்று சேதி வந்தால் உடனே நீ என்ன செய்வாய்?" என்று கேட்டேன். "உடனே அடுத்த தெருவுக்கு ஓடுவேன்.. அங்கே இருக்கின்ற என் மச்சானைக் கூப்பிட்டு கொண்டு ஓடிவருவேன்!" என்றான்.

"ஏன்?" என்று கேட்டேன். "அவன் இதுவரைக்கும் தீ விபத்தையே பார்த்ததில்லையாம். அதனாலே!" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரேபீஸ்; விரட்டப்பட வேண்டிய உயிர்க்கொல்லி

## பகுதி 2



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

செப்டம்பர் 28 உலக ரேபீஸ் [rabeis day] தினமாகும். வருடந் தோறும் பல ஆயிரக்கணக்கான உயிர்களை பலியெடுக்கும் ரேபீஸ் விசர் நாய்க்கடி நோயை பற்றிய விழிப்புணர்வுக்காக ரேபிஸ் தடுப்பூசியை கண்டு பிடித்த விஞ்ஞானி லூயிஸ் பாஸ்டர் மரணித்த இந்த தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த நோய் கண்ட மனிதர்களோ விலங்கு களோ பிழைப்பதில்லை. அதாவது நோய் வந்த பிறகு இதற்கு சிகிச்சை என்பதே கிடையாது. எனினும் இதனை வருமுன் காக்க முடியும். அண்மைய உலக சுகாதார திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின் படி உலகெங்கிலும் வருடந்தோறும் 59,000 மனிதர்கள் ரேபீசால் மரணமடைகின்றனர். பெரும்பாலான மரணங்கள் ஆசிய மற்றும் ஆபிரிக்க பகுதிகளிலேயே நிகழ்கின்றன. நாய், பூனை,நரி, வௌவால், கீரி, ஓநாய், போன்ற பல விலங்குகளால் ரேபிஸ் நோய் ஏற்படுகின்ற போதும் 99 வீதத்துக்கும் அதிகமான பாதிப்புகள் ரேபீஸ் தொற்றுக்கு உள்ளான நாய்க்கடி மூலமே ஏற்படுகிறது.

மருத்துவ வளர்ச்சிகள் பெரிதும் இருந்திராத பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரான்சில் வாழ்ந்த லூயிஸ் பாஸ்டர் பக்டீரியா போன்ற நுண்ணுயிரிகளால் உணவு பழுதடையாமல் பாதுகாக்கும் pasteurization முறைமையை கண்டறிந்தவர். பாஸ்டர் வீரியம் மிக்க ரேபிஸ் கிருமியை வேறு பல உயிரினங்களுக்கு செலுத்துவது மூலம் அதன் வீரியத்தை குறைக்க முடியும் என அறிந்து கொண்டார். குரங்கு, முயல் போன்ற சிறிய விலங்குகளுக்கு வெறி நாய்களின் உமிழ்நீர் போன்றவற்றை செலுத்தி ஆய்வுகளை செய்தார். முயல் போன்ற விலங்குகளில் இருந்து பெறப்பட்ட வீரியம் குறைக்கப்பட்ட மாதிரிகளை நாய்களுக்கு செலுத்தி நோய்வராமல் தடுப்பதில் வெற்றியும் கண்டார்.

முதன் முதலில் மனிதனுக்கு இந்த தடுப்பு மருந்தை பரிசோதிக்கும் நிலை 1885 இல் ஏற்பட்டது. வெறி நாயால் கடுமையாக கடிக்கப்பட்ட ஜோசப் மெய்ச்ட்டர் எனும் ஒன்பது வயது சிறுவனை பாஸ்ட ரின் பரிசோதனைகளை பற்றி கேள்வியுற்ற அவனின் தாய் அழைத்து வந்திருந்தார். அன்றைய நாளில் வெறிநாய் கடிக்கு எந்த சிகிச்சையும் இல்லாத நிலையில் தனது மகனை எப்படியும் குணப்படுத்தும் படி அவனின் தாய் வேண்டி நின்றார். ஆனால் மனிதனுக்கு சிகிச்சை அளிக்கும் அனுமதியை முறையாக பெறாத பாஸ்டர் இது வரை பரிசோதனை ரீதியாக கூட மனிதனுக்கு பிரயோகித்திராத தடுப்பு சிகிச்சை முறையை தொடங்கினர். சிறுவன் பிழைத்துக் கொண்டான். இந்த தகவல் ஐரோப்பா முழுவதும் காட்டுத்தீயென வேகமாக பரவியது. குணப்படுத்த முடியாத ஆட்கொல்லியை குணப்படுத்தும் சர்வதேச கதாநாயகன் ஆனார் பாஸ் டர். வெறி நாய்களால் கடிக்கப்பட்ட பலர் பாஸ்டரிடம் சிகிச்சை பெற வரத் தொடங்கினர்.

மூளையின் பகுதிகளை பாதிக்காத வரையிலும் ரேபீஸ் தன் நோய் அறிகுறிகளை காட்டாது. இதன் காரணமாக நாய்க் கடிகளை எமது மக்கள் சாதாரணமாகவே கருதுகின்றனர். பெரும்பாலும் சிறுவர்கள் நாய் பூனைகளை வளர்க்க மற்றும் அவற்றை தொட விரும்புவதால் அவர்களே அதிக நாய்க் கடிக்கு உள்ளாகின்றனர். அவர்கள் பயத்தில் தமது பெற்றோரிடம் இதனை பெரும்பாலும் தெரிவிப்பது கிடையாது. அறிகுறிகள் தெரிய நாய்கடி நடந்து சில நாட்கள் முதல் பல மாதங்கள் வரை ஆகலாம். நரம்புகள் அதிகம் காணப்படும் கை,கால் விரல்கள்,முகம்,உதடு, தலை போன்ற பகுதிகளில் கடி ஏற்படும் பட்சத்தில் விரைவாக அறிகுறிகள் தென்படும். ஆழமான கடிகள், கடிகளின் எண்ணிக்கை போன்றனவும் இதனை தீர்மானிக்கும். உடலில் சிறிய காயங்கள் காணப்பட்டு அவற்றில் வெறி நாயின் உமிழ் நீர் படுதல்,அவற்றில் அவை நக்குதல் போன்ற காரணங்களாலும் நோய் ஏற்படும்.எனினும் இதற்கு சிறிது காலம் எடுக்கும்.இதன் காரணமாக நோய் நிலையோ மரணமோ ஏன் ஏற்பட்டது என்று தெரியாமல் போகும். இதன் காரணமாக நாய் கடி நிகழ் ந்தோ அல்லது சந்தேகப்படும் படியான நாய் நக்குதல்,அதன் திரவங்கள் உடலில் படுதல் என்பன ஏற்பட்டால் சிகிச்சை பெறுவது சிறப்பானது.



ஆரோக்கியமான நாய்களை வெறி நாய் கடித்த பின் அறிகுறிகள் இரண்டு முதல் எட்டு வாரத்திற்குள் தெரியத் தொடங்கும். தலைப் பகுதியில் கடி படும் பட்சத்தில் பத்து நாட்களுக்குள் அறிகுறிகள் தெரியும். நோய் கண்ட நாய்களின் நடத்தை மாறத் தொடங் கும்.நாய்களின் நடத்தைகள் இரண்டு விதமாக மாறத் தொடங்கும். முதலாவதாக பியுரியஸ்[ furious ] என்னும் வெறித் தன்மை அறிகுறியாகும்.இந்த நிலையில் நாய் அமைதியின்மையாக காணப்படும். தன்னிச்சையாக அங்கும் இங்கும் அலைந்து திரியும். கண்ணில் பட்ட மனிதர்கள், விலங்குகள்,பொருட்கள் என சகலதையும் கடிக்கும். கூண்டில் அடைபட்ட நாய் கூண்டைக் கடிக்கும். தன்னைத் தானே காயப்படுத்தும். இறுதி யாக அதன் தாடைத் தசைகள் செயலிழந்து போக உணவு உண்ண முடியாமல், நீர் அருந்த முடியாமல் அமைதியாகி வலிப்பு நிலை கண்டு உமிழ் நீரை சுரந்தபடி சில நாட்களில் இறந்துவிடும். அடுத்தவகை டம்ப் [dumb] எனும் ஊமை விசர் நிலையாகும்.இந்த வகை நாய்கள் எப்போதும் முடங்கிய படி இருக்கும்.எதையும் கடிக்காது. இந்த வகை நாய் வெளியே அலையாது. அதிக வெளிச்சத்தை விரும்பாது. கீழ் தாடையில் வாதநிலை வருவதால் வாயை திறந்த நிலையில் காணப்படும். உணவு அருந்த முடியாது இறந்து கிடக்கும்.இந்த நிலையில் நாய் உரிமையாளர்கள் நாய் எலும்பு போன்ற எதனையும் விழுங்கி விட்டது என்று கருதுவார்கள். அதனை எடுக்க முயல்வார்கள். இதன் காரணமாக அவர்கள் நாய்க்கடிக்கு உள்ளாகின்றனர். சில வேளைகளில் இந்த வகை நாய்கள் எந்தவித அறிகுறிகளையும் காட்டாது இறந்து கிடக்கும். பூனைகளை பொறுத்த வரையில் மனிதர்களையும் விலங்குகளையும் தாக்கிக்கடிக்கும்.கால் நகங்களால் பிராண்டும். அதிக உமிழ்நீரை சுரக்கும். சிறிது நாட்களில் இறந்து விடும். சில வேளைகளில் ஆடு மாடு போன்ற கால்நடைகளை விசர் நாய் கடித்தால் அவற்றுக்கும் இந்த நோய் வரும். நாய்களைப் போல் அவையும் உமிழ் நீரை சுரந்தபடி இருக்கும். மூர்க்கமான முறையில் திரியும். உணவு நீர் எடுக்க முடியாமல் சில நாட்களில் இறந்துவிடும். அவற்றின் பாலை மனிதர்கள் நுகரும் போது அவர்களுக்கும் இந்த நோய் வரலாம்.

மனிதர்களைப் பொறுத்தவரையில் காய்ச்சல்,உணவு உட்கொள்வதில் சிரமம்,அதிகம் உணர்ச்சி வயப்படும் நிலை,மூச்சு திணறல்,குளிர் காற்று அதிக வெளிச்சம் போன்றவற்றை தாங்கும் ஆற்றல் இருக்காது.அதிக தாகம் இருந்தும் தண்ணீர் குடிக்க முடியாத நிலை ஏற்படுவதால் தண்ணீரை கண்டதும் பயம்,கோபம் ஏற்படும்.இறுதியில் நாய் பூனைகளை போல் ஓலமிட்டபடி இருப்பார்கள். குரல்வளையில் வாதம் ஏற்படுவதால் இந்த நிலை ஏற்படும். இறுதியில் அவலமான முறையில் மரணிப்பார் கள். வைத்தியசாலைகளில் இந்த நோய் வந்தவர்களை கட்டி வைத்திருப்பார்கள்.

மனிதனையும் விலங்குகளையும் கடுமையாக பாதிக்கும் ரேபீஸ் நோய்க்கு பாஸ்டரின் அந்த ஆரம்ப தடுப்பு மருந்து ஒரு தீர்வாக அமைந்தது . நுண்ணுயிரியலின் தந்தை எனப்படும் பாஸ்டர் உண்மையில் ரேபிஸ் கொடிய நோயில் இருந்து உலகை காத்த மீட்பருமாவர். இன்று பல முன்னேற்றகரமான மனித மற்றும் விலங்குகளுக்கு ஏற்றக் கூடிய தடுப்பு ஊசிகள் வந்துள்ளன. நேரடியாக ரேபீசுக்கு எதிரான பிறபொருள் எதிரிகளை [antibo dies] செலுத்தும் முறையும் [ARS] மருத்துவத்தில் காணப்படுகிறது. எனினும் இந்த வசதிகள் சகல வைத்திய சாலைகளிலும் கிடைப்பதில்லை. பெரும்பாலும் மாவட்ட வைத்திய சாலைகளிலும் பெரிய வைத்தியசாலைகளிலுமே இருப்பதால் கிராமப்புற மக்கள் நாய்க் கடிகளுக்கு சிகிச்சை பெறாமல் தவிர்க்கின்றனர். பல இடங்களில் ஏற்பு வலியையும் ரேபீஸ் நோயையும் ஒன்றாகப் போட்டு குழப்பி விடுவதையும் காணமுடிகிறது. இந்த வகையான மனநிலை ஆபத்தானது. ரேபீஸ் வந்தால் காப்பாற்றமுடியாத நோய் என்ற போதும் விசர் நாய் கடித்தால் கூட அந்த நோய் மூளை போன்ற நரம்பு இழையங்களை தாக்கும் வரை ஏற்படாது. இந்த நிலைமைக்கு நேரடியாக ரேபீஸ் பிறபொருள் எதிரிகளை செலுத்தி நோய் வராமல் தடுக்க முடியும்.சில கிராமங்களில் நாய் கடித்தால் சுண்ணாம்பு போடுதல், தலையில் குட்டுதல்,மந்திரித்தல் போன்ற வேளைகளில் ஈடுபடுகிறதை காண முடிகிறது.

நாய் போன்ற விலங்குகளை அதிகம் கையாளும் கால்நடை வைத்தியர்கள்,தடுப்பூசியாளர்கள் போன்றவர்கள் இந்த நோய்க்கு அதிகம் உள்ளாகக் கூடியவர்கள் என்பதால் இதற்குரிய முன் தடுப்பூசியை [preexposure vaccine] போடுவது மிக முக்கியமானது. அடிக்கடி அவர்களின் குருதியில் ரேபீஸ் பிறபொருள் எதிரியின் அளவையும் பரீட்சித்து அறிய வேண்டும்.இந்த வசதிகள் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் உண்டு. நியம அளவை விட குறைந்திருந்தால் மீளவும் தடுப்பு மருந்து போட வேண்டும். ரேபீஸ் நோய் கண்டதாக சந்தேகப்படும் நாய் போன்றவற்றின் தலை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கு அல்லது பேராதனை பல்கலைகழக விலங்கு மருத்துவ பீடத்துக்கு அனுப்பப்பட்டு நோய் உறுதிப்படுத்தப்படுகிறது.

நோய் விழிப்புணர்வு முக்கியமானது. நோய்களை காவும் விலங்குகளை தடுப்பூசி வழங்கி இந்த நோயை இல்லாமல் செய்வதோடு காவி விலங்குகளில் பெருக்கத்தை குறைக்கவும் வேண்டும்.பல நாடுகள் இந்த விடயத்தில் அதிக கரிசனையுடன் தமது நாடுகளில் இருந்து இந்த நோயை முழுதாக அகற்றியுள்ளன. இலங்கை போன்ற நாடுகளில் கடும் பெறுமதியான தடுப்பு மருந்துகள் இலவசமாக வழங்கப் படுகின்றதை பொது மக்கள் சாதகமாக பயன்படுத்த வேண்டும். மக்கள் விழிப்புணர்வு அடையும் வரை இந்த நோயை அகற்ற முடியாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 865





இந்தப் பெண்மணியையே போய் அழைத்து வரும்படி சொல்லுங்கள். இந்த உலகத்தில் அந்த மாதரசியைக் கட்டுக்குள் வைக்கக் கூடியவர்கள் இரண்டே பேர்தான்! அவர்களில் இந்தப் பெண் ஒருத்தி!

"இன்னொருவர் யார்?" என்று முதன் மந்திரி கேட்டதற்கு, ஆழ்வார்க்கடியான் சிறிது தயங்கி "இன்னொருவர் கடலில் முழுகிவிட்டதாக ஊரெல்லாம் வதந்தியாயிருக்கிறது!" என்றான்.

குந்தவை தேவி அதைக் கவனியாதவள்போல், பூங்குழலியைப் பார்த்து, "கரையர் மகளே! உடனே போய், உன் அத்தையை இங்கே அழைத்து வா! அவளுக்கு இங்கே ஒரு கெடுதியும் நேராது. மிக முக்கியமான காரியமாக உன் அத்தையை உடனே நான் பார்க்க வேண்டியிருக்கிறது! எனக்காக இந்த உதவி செய்வாய் அல்லவா?" என்றாள்.

"ஆகட்டும், அம்மா, முயன்று பார்க்கிறேன் ஆனாலும் முதன்மந்திரி இப்படிப் பட்ட உபாயத்தைக் கடைப் பிடித்திருக்க வேண்டியதில்லை. முன்னாலேயே எனக்குத் தெரிந்திருந்தால்.."

"ஆமாம் விடயங்களை மறைத்து வைப்பதில் இம் மாதிரி அசந்தர்ப்பங்கள் நேரத் தான் நேருகின்றன. அதை நானே உணர்ந்து வருத்தப் பட்டுக் கொண்டிருக்கிறேன். சீக்கிரம் அத்தையை அழைத்துக் கொண்டு வா! அதற்குப் பிறகு இன்னொரு முக்கியமான வேலை உனக்கு இருக் கிறது!" என்றாள் இளைய பிராட்டி.

"திருமலை! நீயும் இந்தப் பெண்ணோடு போய்விட்டு வா! கோட்டை வாசல் வழியாக நீங்கள் வருவதில் ஏதேனும் சிரமம் இருந்தால், நமது அரண்மனைக்கு வரும் இரகசிய வழியில் அழைத்துக் கொண்டு வா!" என்றார் அநிருத்தர்.

பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானும் போன பிறகு குந்தவை முதன்மந்திரியைப் பார்த்து, "ஐயா! வாசலில் வந்து காத்திருப்பவர்களுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி அனுப்பி விட்டு வாருங்கள். மிக முக்கியமான காரியங்களைப் பற்றித் தங்களிடம் ஆலோசனை கேட்க வேண்டியிருக்கிறது!" என்றாள்.

"இதோ வந்துவிடுகிறேன், தாயே! எனக்கும் தங்களிடம் பேச வேண்டியதிருக்கிறது!" என்று சொல்லி விட்டு அநிருத்தர் சென்றார்.

இத்தனை நேரமும் மௌனமாக இருந்த வானதி, "அக்கா! பூங்குழலிக்கு இன்னொரு முக்கியமான காரியம் என்ன வைத்திருக்கிறீர்கள்? மறுபடியும் நாகைப்பட்டினத்துக்கு அனுப்பப் போகிறீர்களா?" என்று கேட்டாள்.

"ஆம் வானதி! நீ வீணாகக் கவலைப்படாதே! பொன்னியின் செல்வனுக்கு ஆபத்து ஒன்றும் நேர்ந்து விடாது."

"நானும் அவளுடன் நாகைப் பட்டினத்துக்குப் போகிறேனே அக்கா!" "நீ போய் என்ன செய்வாய்? உன்னைக் காப்பாற்றுவதற்கு வேறு யாராவது வேண்டுமே?"

"அந்த ஓடக்காரிக்கு என்னைக் கண்டால் பிடிக்கவேயில்லை, அக்கா!" "எப்படியடி அவள் மனதை நீ கண்டுபிடித்தாய்?" "என்னுடன் அவள் பேசவே இல்லை!"

"நீயும் அவளோடு பேசவில்லை. அவளும் உன்னோடு பேசவில்லை." "நான் அடிக்கடி அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

(தொடரும்...)

# பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் இரதோற்சவம் இன்று

தொன்றுதொட்டு இந்து சமயப் பண்பாடும் தமிழும் செழிப்புற்று விளங்குவது இந்து மகா சமுத்திரத்தின் நித்திலமாய் விளங்கும் இலங்கைத் திருநாடாகும். இவ்விலங்காபுரியின் வடபாகத்திலே வீணாகானபுரம் என்று சொல்லப்பெறுகின்ற யாழ்ப்பாண நன் நகரின் வட மேற்றிசையில் நெய்தலும் மருதமும் கூடிய சூழலில் எழிலுற அமைந்த தலமே பொன்னாலை ஆகும். காத்தற் கடவுளாகிய பகவான் ஸ்ரீமத் நாராயணமூர்த்தியின் திரு அவதாரம் நிகழ்ப் பெற்றதும் திருவடிச் சுவடு பதியப் பெற்றதும் இந்திரன், மஹாலக்குமி முதலானோர் வணங்கப் பெற்றதுமான சிறப்புக்களைப் பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயம் கொண்டுள்ளது.

பதினென் மஹாபுராணங்களில் ஒன்றான ஸ்கந்த புராணத்திலே தமிழின் கைலாச மான்மியத்தில் பொன்னாலயப் பெருமை உரைத்த படலத்தில் நைமிசாரண்யவாசிகளிற்கு சூதமா முனிவர் உரைப்பதாக இத் தலத்தின் பெருமை கூறப்பட்டுள்ளது.

முன்னொரு காலத்தில் துர்வாச முனிவரது சாபத்தினால் அமரர் தங் கோனாகிய இந்திரன் இவ்விடத்திலே வலைஞர் குலத்திலே பிறந்தான் என்றும். ஒரு நாள் அவன் தன் பந்துக்களுடன் சமுத்திரத்திலே வலை வீசிய போது மகாவிஷ்ணு பொன்னாமை (கூர்மம்) வடிவிலே அகப்பட்டு இந்திரனிற்கு சாப விமோசனம் தந்த தாகவும். பொன்னாமையைக்கண்டு யாவரும் அதிசயித்து நிற்கையில் அவ்வாமை கல்லாகியது என்றும் அதன் பின்னர் அடியவர்கள் ஒன்று கூடி கூர்ம அவதாரம் புரிந்த மஹா விஸ்ணுவை வரதராசப் பெருமாள் என்னும் பெயருடன் பிர திஷ்டை செய்ததாகவும் ஸ்தல வரலாற்றுப் பெருமை கூறப்படுகிறது. ஆதியிலே பொன்னாகிப் பின் கல்லாக மாறிய கூர்ம மூர்த்தி இன்றளவும் மூலாலயத்தில் காணப் படுகிறார் என்பது சிறப்பிற்குரியது.



### மூர்த்திகள்

ஸ்ரீதேவி பூமிதேவி, சமேத ஸ்ரீ வரதராஜப் பெருமான் மூலாலயத்தில் காட்சி தருகிறார். அத்துடன் ஆதி விஷ்ணு, கூர்ம மூர்த்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீ ரங்கநாதர். சந்தான கோபாலர். தன்வந்திரி. ஹயக்கிரிவர். ஸ்ரீதேவி. பூமி தேவி. ஆண்டாள் நாச்சியார். சக்கரத்தாழ்வார். நவக்கிரகங்கள். சனீஸ்வரர். தசாவாதார மூர்த்திகள். ஆழ்வார்கள். ஆஞ்சநேயர். முதலான மூர்த்திகள் காணப்படுகின்றனர். அத்துடன் ஆரம்பத்தில் ஏழாம் வீதியாக இருந்த இடத்தில் விநாயகப் பெருமானிற்கும் திருக்கோவிலின் முன்புறம் நரசிங்க வைரவிற்கும் ஆலயங்கள் அமையப்பெற்றுள்ளன.

### தீர்த்தமும், தலவிருட்சமும்

பகவானது திருவடிச் சுவடு பதிந்து இந்திர சாப விமோசனம் வழங்கிய திருவடி நிலையே ஸ்தல தீர்த்தம் ஆகும். தீர்த்த உற்சவ காலங்களில் பெருமான் இங்கு எழுந்தருளி தீரத்தங் கொடுப்பார். ஆலய உட்பிரகாரத்தின் வடக்கு. தெற்கு வீதிகளில் தலவிருட்சமாகிய வன்னி மரம் காணப்படுகிறது.

### உற்சவங்கள்

தினமும் வைகாசன முறைப்படி பூசைகள் இடம்பெறுகின்றன. வைணவ ஆலயமாக இருப்பினும் கூட விநாயகர் வழிபாட்டுடன் பூஜைகள் ஆரம்பமாவதும் விபூதி தாரணம் இடம்பெறுவதும் சிறப்புக்கு உரியதாகும்.

ஆவணி மாதத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியை தீர்த்த உற்சவமாகக் கொண்டு 18 தினங்கள் பிரம்மோற்சவம் இடம்பெறும். அதுபோலவே மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி தினத்தை இரதோற்சவமாகக் கொண்டு 10 தினங்கள் பிரம்மோற்சவம் இடம்பெறும். இவை தவிர மாசி மாத இலட்சார்ச்சனை. ஆடிப்பூரம். வரலக்சுமி விரதம். புரட்டாதி சனி விரதம் முதலானவையும் சிறப்புற இடம்பெறுகின்றன.

### பூலோக வைகுண்டம்

ஆவணிப் பிரம்மோற்சவ காலத்தில் இடம்பெறும் 17 ஆம் நாள் உற்சவமாகிய இரதோற்சவப் பெருவிழாவானது பொன்னாலயத்தை பூலோக வைகுண்டமாக மாற்றுகின்றது. அதிகாலையில் கலச அபிஷேகம் இடம்பெற்று மூலாலய பூஜையைத் தொடர்ந்து ஸ்ரீ வரதராஜப் பெருமாளிற்கு அதி உன்னத வசந்த மண்டப பூஜை இடம்பெறும். தொடர்ந்து இன்னிசை கான மழை பொழிய சங்குநாதம் நின்றொலிக்க பூமாரி பொழிய. செடியாய வல்வினைகள் தீர்க்கும் நெடியாய பெருமான் சிங்காசனத்தில் ஏறி அடியார்கள் "கோவிந்தா கோபாலா" என்று போற்றி செய்ய தேர் ஏறி வரும் காட்சியைக் காண நாலாயிரம் கண் படைத்திலனே நான்முகன் என்று எண்ணத் தோன்றும்.

இத்தகைய பெருமைமிகு பொன்னாலையம்பதி வாஸனின் திவ்ய இரதோற்சவப் பெருவிழா இன்றைய தினம் இடம்பெறவுள்ளது. ஆகவே மண்ணுலகத்தீர் எல்லோரும் வரதனின் வாசல் வந்து வடம்பிடித்துபரம பதத்தில் இடம்பிடிக்கக் கடவீர்.

**கணேசநாதன் பிரணவன் (மூளாய்)**
**2 ஆம் வருட மாணவன்,**
**இந்து நாகரீகத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை எண்ணியே வருந்தி தளர்ந்து விடாமல் நல்லவைகளைச் செய்ய எழுந்து நடைபோடுவதே சிறப்பம்சமாகும் - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி அநுரவை பாராட்ட வேண்டும்

இந்த உலகம் துறவிகளால் ஆளப்பட வேண்டும் என்றான் ஓர் அறிஞன்.

இவ்வாறு அந்த அறிஞன் கூறியதற்குக் காரணம், துறவிகள் தமக்குச் சொத்துக்கள் தேவை என நினைக்கமாட்டார்கள். தவிர குடும்பப்பற்று அவர்களிடம் இருக்காது.

எனவே அவர்கள் தமது ஆட்சி அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யமாட்டார்கள்.

மக்களின் நலனுக்காகக் கடுமையாகப் பாடுபடக்கூடிய சூழ்நிலை அவர்களுக்கு உண்டு.

ஆக, துறவிகள் பற்றற்றவர்கள் என்பதால் எதையும் நீதியோடும் நேர்மையோடும் சிந்திப்பார்கள். அதன்வழி செயற்படுவார்கள். எனவேதான் இந்த உலகம் துறவிகளால் ஆளப்பட வேண்டும் என்ற முடிவை அந்த அறிஞன் எடுத்திருந்தான்.

உண்மை. துறவியான காமராஜரின் ஆட்சியே தமிழகத்தின் பொற்காலம் எனப் போற்றப்பட்டது.

இந்தியாவின் பிரதமராக இருந்த வாஜ்பாய் ஒரு சிறந்த தலைமைத்துவத்தை இந்தியாவுக்குத் தந்திருந்தார்.

அதுபோல இன்றைய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உலகம் போற்றும் உன்னதத் தலைவராக விளங்குவதற்கு அவரின் துறவும் ஆத்மபலமுமே காரணமாகும்.

அதேநேரம் குடும்பஸ்தர்களின் ஆட்சியைப் பார்க்கும்போது அங்கு ஊழல்களும் குடும்ப ஆட்சியும் சேர்ந்து நாட்டைக் கந்தறுத்திருப்பதைக் காணமுடியும்.

இதற்கு எங்கள் நாட்டின் கடந்த கால ஆட்சியாளர்கள் மிகச் சிறந்த உதாரணங்களாவர்.

ஆனால் இப்போது இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்கும் அநுர குமார திஸாநாயக்க ஒரு துறவு நிலையில் இருக்கின்ற ஆட்சியாளர் எனலாம்.

ஆம், ஜனாதிபதியாகப் பதவியேற்கும்போது கூட அவர் தனது குடும்பத்தை முதன்மைப்படுத்தவில்லை.

தவிர ஏனைய நிகழ்வுகளிலும் அவர் தனது குடும்பத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் வெளிப்படுத்தவில்லை.

இதன் காரணமாக அரச சலுகைகளை அவரால் நிராகரிக்கமுடிகிறது.

ஜனாதிபதிக்கான செலவுகளைக் கடுமையாகக் குறைக்க முடிகிறது. இதையும் கடந்து வெளிநாட்டுப் பயணங்கள் கூட மிகவும் குறைந்த செலவில் நடந்தாகிறது எனும்போது, அதுதான் உண்மையான - மக்கள் மீது பற்றுக்கொண்ட ஒரு ஆட்சித் தலைவனின் இலட்சணமாக இருக்கமுடியும்.

உண்மை. முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை இரத்துச் செய்கின்ற சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்து அதை நிறைவேற்றுவதென்பதற்குள், தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் சலுகைகளும் இரத்துச் செய்யப்படுகின்றன என்ற உண்மையை எவரும் மறந்துவிடக்கூடாது.

ஆக, எதிர்காலத்தில் தனக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகளும் இல்லாது போகும் என்று தெரிந்திருந்தும் அஃதெதுவும் தேவையில்லை. மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படக்கூடாது என்ற ஒரே இலக்குடன் செயற்பட்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை நாம் பாராட்டியேயாக வேண்டும்.

# உள்ளகப் பொறிமுறையை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம்

## பாராளுமன்றில் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளகப் பொறிமுறையை ஒருபோதும் நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம். இந்த விடயத்தில் அரசாங்கம் நியாயமாக நடந்துகொள்ளும் என்று நம்புகின்றோம் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய கணக்காய்வுத் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா தீர்மானம் மிக இறுக்கமாகியுள்ளது. எங்கள் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயத்தைக் கோரும் வகையில் ஐ.நா தீர்மானம் மிகவும் வலுவாக இருக்கும்நிலைமையில்வெளிவிவகார அமைச்சர் உள்ளகப் பொறிமுறையில்மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களைக் கையாளப் போவதாக கூறுகின்றார். அது எப்படி சுடச் சொன்னவரைக் காப்பாற்றிவிட்டு சுட்டவரை விசாரிப்பதா? களவெடுக்க சொன்னவனை விட்டுவிட்டு களவெடுத்தவனை விசாரிப்பதா? எங்களைப் பொறுத்தவரையில் உள்ளக விசாரணைகளை நாங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம். சர்வதேசக் கண்காணிப்புடன் விசாரணைகள் நடக்க வேண்டும். அரசாங்கம் நியாயமாக நடந்துகொள்ளும் என்று நம்புகின்றோம்.

கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்களில் இந்த அரசாங்கத்தின் ஒரு அமைப்பு பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த காலங்களில் போராட்டத்தை நசுக்கிய போராட்டத்தில் மக்களைக் கொன்று குவித்தவர்களைத் தண்டிக்க வேண்டும் என்பதே பிரதான நோக்கமாகும். இதனால் இந்த விடயத்தில் உள்ளக விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது.

இதேவேளை மனித உரிமை மீறல் தொடர்பில் இந்தியா தனது கருத்தை ஆழமாகப் பதிவு செய்துள்ளது. இதனைப் பாராட்டுகின்றோம். மாகாண சபை முறைமை அரசியல் ரீதியிலான அதிகாரப்பரவலாக்கலை செய்ய வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது. இதனை வரவேற்கின்றோம் என்றார். (ம-7)

## சட்டவிரோத மரக்கடத்தல் பொலிஸாரால் முறியடிப்பு

கிளிநொச்சியிலுள்ள அரச காட்டுக்குள் அனுமதியின்றி உட்புகுந்து சட்டவிரோதமான முறையில் பெறுமதி வாய்ந்த மரங்களை வெட்டி அவற்றை யாழிற்கு கடத்தும் செயற்பாடு தர்மபுரம் பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைவாக தர்மபுரம்பொலிஸாரால் நேற்று அதிகாலை வாகனச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது காட்டு மரத்தடிகளுடன் பயணித்த கனரக வாகனம் ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாகனம் மற்றும் மரங்களைப் பறிமுதல் செய்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின் சந்தேக நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் தர்மபுரம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திஸாநாயக்க தெரிவித்தார். (ம-7,316)

## 'இவர்கள் மகாத்மாக்கள்' நூல் அறிமுக விழா

மூத்த சுயாதீன ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தா எழுதிய "இவர்கள் மகாத்மாக்கள்" நூலின் அறிமுக விழாவானது நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் பேராசியர் வ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசிரியர் திரு.யோ.சுதந்திரன் வரவேற்புரையையும் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் ஆசியுரையையும் தொடர்ந்து வாழ்த்துரையைப் பேராசிரியர் க.தேவராஜா அவர்களும் வழங்கவுள்ளனர்.

டில்லி பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவன் திரு.ஐ.வி.மகாசேனனின் அறிமுக உரையைத் தொடர்ந்து கலாபூஷணம் பண்டிதை அவர்களுக்குச் சிறப்புப் பிரதி வழங்கி வைக்கப்படவுள்ளது. (ம-7)

### சுகாதார சீர்கேட்டுடன்

## இயங்கிய உணவகங்களுக்கு நீதிமன்றால் தண்டம் விதிப்பு

(கிளிநொச்சி)

நாச்சிக்குடாப் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய இரு உணவகங்களுக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டதோடு சீர்கேடுகளைச் சீர்செய்யும்வரை உணவகங்களை மூடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி முழங்காவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவின் மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் றெணால்ட், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான மு.ஜெனோயன், தளிர்ராஜ், இ.தர்மிகன் ஆகியோர் இணைந்த குழுவினரால் இரு உணவகங்களும் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்தமை இனங்காணப்பட்டிருந்தது.

அதனையடுத்து குறித்த உணவகங்களுக்கு எதிராக முழங்காவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இ.தர்மிகனால் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கினை விசாரித்த கிளிநொச்சி நீதிமன்ற நீதவான் இரு உணவகங்களுக்கும் தலா 65 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்ததுடன் சீர்கேடுகளை நிவர்த்தி செய்யும்வரை இரண்டு உணவகமும் தற்காலிகமாக மூடுமாறும் கட்டளையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## யாழ். மாநகரசபையின் நடமாடும் சேவை

பொதுமக்களின் நன்மை கருதி யாழ்ப்பாணம் மாநகர சபையால் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 3.30 மணிவரை பாஷையூர், குருநகர், கொழும்புத்துறை, நாவாந்துறை ஆகிய வட்டாரங்களில் நடமாடும் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன் பிரகாரம் குருநகர், பாஷையூர் மக்கள் குறித்த தினத்தன்று கிறீன் பிலிட் சனசமூக நிலையத்திலும் கொழும்புத்துறை வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் விண்மீன் சனசமூக நிலையத்திலும் நாவாந்துறை புனித நீக்கிலாஸ் சனசமூக நிலையமூடாக நாவாந்துறையைச் சேர்ந்த பயனாளிகளும் குறித்த விசேட சேவையைப் பெற்றுப் பயனடைய முடியும் என யாழ்.மாநகர சபை அறிவித்துள்ளது. இவ் ஒருநாள் விசேட நடமாடும் சேவையூடாக ஆதனவரி அறவிடல், வளர்ப்பு நாய்களுக்கான நாய்ப்பட்டி விநியோகம், துவிச்சக்கரவண்டி உரிமம், ஆதனங்களுக்கான பெயர் மாற்றப் படிவம் வழங்கல், வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாகக் கழிவகற்றல் பொறிமுறை தொடர்பான சேவை வழங்கல், கட்டடம் தொடர்பான பிரச்சினைகளுக்கான ஆலோசனை வழங்கல், வியாபார அனுமதிக்கான ஆலோசனை வழங்கல், நீரிணைப்புத் தொடர்பான பிரச்சினைகளுக்கான ஆலோசனை வழங்கல், 077 784 0275 எனும் முறைப்பாட்டு Hotline ஐ மக்களுக்குச் சென்றடையச் செய்தல், சித்த மருத்துவ, சுகாதார மருத்துவர்களின் ஆலோசனைகளை வழங்கல் போன்ற பயன்மிகு சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரழிவுகளும் நில நடுக்கமும் குறித்த ஒரு பார்வை

04

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

ஆகவே ரிக்டர் அளவில் 5 என்ற அளவு நான்கை விட பத்து மடங்கு அதிக அதிர்வுகளைக் கொண்டதாக இருக்கும். மூன்றை விட 10x10 அல்லது 100 மடங்கு அதிக அதிர்வுகளைக் கொண்டதாக இருக்கும்.

ரிக்டர் அளவில் 2.0 இற்கு குறைவானவற்றை சாதாரண மனிதர்களால் அறிய முடியாது. இவை மைக்ரோ நிலநடுக்கம் எனப்படும். இவை சாதாரணமாகத் தொடர்ந்து நடைபெறும். 6.0 இற்கு மேல் பதிவாகும் நிலநடுக்கங்கள் மோசமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை. ரிக்டர் அளவை உருவான பிறகு அதிகபட்சமாக 9.5 வரை பதிவு செய்யப்பட்டுள்ளது.

1960 ஆம் ஆண்டு சிலியில் (Chile) ஏற்பட்ட 9.5 அளவிலான வால்டிவியா நிலநடுக்கம் இதுவரை பதிவான மிகப் பெரிய நிலநடுக்கமாகும். பிற வரலாற்று மகத்தான நிலநடுக்கங்களில் ஜப்பானில் 2011- இல் ஏற்பட்ட 9.0 அளவிலான டோகோகு நிலநடுக்கம், 2004-இல் இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட 9.2 அளவிலான நிலநடுக்கம் மற்றும் 1964-இல் அலாஸ்காவில் ஏற்பட்ட 9.2 அளவிலான நிலநடுக்கம் அடங்கும்.

இருந்தாலும் நில அதிர்வு நிகழும் இடத்தைப் பொறுத்து ஒரே ரிக்டர் அளவைக்கு மாறுபட்ட பாதிப்புகள் ஏற்படலாம். மக்கள் நெருக்கியடித்து வாழும் நகரின் மையத்தில் நிகழும் நில அதிர்வு அளவிட முடியாத நாசத்தையும், உயிர் சேதத்தையும் ஏற்படுத்தலாம். ஆனால் அதே அளவு நில அதிர்வு ஒரு தட்டையான வனப்பிரதேசத்தில் ஏற்பட்டால் அங்குள்ள வனவிலங்குகளைச் சற்று சிதறி ஓடுவதைத் தவிர வேறு பாதிப்புகளை உண்டாக்காமலும் இருக்க முடியும்.

ஒரு நாடு பூகம்பத்தால் பாதிக்கப்படுவதை நிர்ணயிப்பது அதன் புவியியல் அமைப்பாக பார்க்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக பல ஆசிய நாடுகள் பூகம்பங்களால் எளிதில் பாதிக்கப்படலாம்.



சீனா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் நிலநடுக்கங்களால் அடிக்கடி அவதிப்படுகின்றன.

ஒப்பீட்டளவில் ஜப்பான் உலகளவில் அதிக எண்ணிக்கையிலான பூகம்பங்களை சந்திக்கிறது. அதே போன்று இந்தோனேசியா பூகம்பத்தால் அதிகம் பாதிக்கப்படக் கூடிய நாடாக பார்க்கப்படுகிறது. இங்கு பல ஆயிரம் பூகம்ப நிகழ்வுகள் பதிவாகியுள்ளது. மெக்சிகோ மற்றும் பிலிப்பைன்ஸை விட மிக அதிகம் என நிபுணர்கள் கூறுகிறார்கள். உலகளவில் மிக அழிவுகரமான பூகம்பங்கள் பற்றிய ஆய்வுகளில், சீனா இந்தோனேசியா ஆகிய நாடுகள் முதல் இடங்களை பிடிக்கிறது. கடந்த 30 ஆண்டுகளில் உலகளவில் அதிக ஆபத்தான நில நடுக்கங்கள் இங்கு தான் பதிவாகியுள்ளது.

சீனாவில் கடந்த 30 ஆண்டுகளில் 186 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளது. அதில், இந்தோனேசியா 166 ஆபத்தான நிலநடுக்கங்கள், ஈரான் 109 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. அதிக நிலநடுக்கத்தைச் சந்திக்கும் ஜப்பான் 98 ஆபத்தான நிலநடுக்கத்தை தான் பார்த்துள்ளது.

இதற்கு அடுத்தபடியாக அமெரிக்காவில் 78 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளது. அதே போன்று துருக்கி 62 நிலநடுக்கங்கள், இந்தியா 58 நிலநடுக்கங்கள் மற்றும் பிலிப்பைன்ஸ் 55 சக்திவாய்ந்த நிலநடுக்கங்களும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடிப்படையில் நிலநடுக்கத்தை நம்மால் முன்கூட்டியே கணிக்க முடியாது. ஆகவே இத்தகைய பேரழிவில் இருந்து தப்பிக்கவும், உயிர் மற்றும் பொருள் சேதங்களைத் தவிர்ப்பதற்கும், நிலநடுக்கத்தைத் தடுக்கும் அல்லது அதனால் ஏற்படக்கூடிய உயிரிழப்புகளைத் தடுக்கும் வீடுகள் மற்றும் கட்டடங்களைக் கட்டுவதுதான் சிறந்த உத்தியாக இருக்கும்.

பாதிப்புக்கு உள்ளாகும் பகுதிகளில் இருந்து மக்களை முன்கூட்டியே வெளியேற்றுவதும் உயிர் இழப்புகளைத் தவிர்க்க உதவும். இருப்பினும் பாதிப்புக்கு உள்ளாகும் பகுதிகளில் இருந்து மக்களை விரைவாக வெளியேற்றுதல் என்பது நடைமுறையில் சாத்தியமில்லாதவை. ஏனெனில், நிலநடுக்கத்தை சில நிமிடங்களுக்கு முன்புதான் கணிக்க முடியுமே தவிர முன்னதாகவே கணிக்க இயலாது.

பெரும்பாலான நிலநடுக்கங்கள் பூமியின் மேல் பகுதியில் திடீரென வெளிப்படும் அழுத்தத்தால் ஏற்படுகின்றன.

டெக்டோனிக் இயக்கங்களின் காரணமாக இந்த பதற்றம் படிப்படியாக உருவாகிறது. பெரும்பாலும் இது புவியியல் ரீதியாக பாதிப்பில் உள்ள பகுதியில் நடைபெறுவதாக விளக்குகிறது ஆனால் அது எப்போது நிகழும் என்று கணிக்க இயலாது. ஏனெனில், பூமியில் மேற்பகுதியில் ஏற்படும் அழுத்தத்தின் தன்மை வெளிப்படும் விதம் நமக்கு தெரியாது, என பிரிட்டிஷ் புவியியல் ஆய்வின் நில அதிர்வு நிபுணர் ரிச்சர்ட் லக்கெட் தெரிவிக்கிறார்.

மேலும் அவர் கூறுகையில் பெரிய அழுத்தங்களால் பதற்றம் உருவாகிறது என்பதை நாங்கள் அறிவோம். அவை எங்கு ஏற்படுகிறது என்றும் எங்களுக்குத் தெரியும். ஆனால் அந்த அழுத்தத்தின் வெளிப்பாடு எப்போது இருக்கும் என்று எங்களுக்குத் தெரியாது, என்கிறார் ரிச்சர்ட்.

தற்போதைய நவீன கருவிகளைக் கொண்டு கண்டுபிடிக்கப்படக் கூடிய நில நடுக்கங்கள் ஒவ்வொரு ஆண்டும் 500,000 ஏற்படுகின்றன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுள் 100,000 மனிதர்களால் உணரக்கூடியவையாகும். சிறு நில நடுக்கங்கள் உலகம் முழுவதும், குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் கலிபோர்னியா மற்றும் அலாஸ்கா, மெக்சிக்கோ, குவாத்தமாலா, சிலி, பெரு, இந்தோனேசியா, ஈரான், பாக்கிஸ்தான், போர்த்துக்கல்லின் சில பகுதிகள், துருக்கி, நியூசிலாந்து, கிரேக்கம், இத்தாலி, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகியவற்றில் கிட்டத்தட்ட தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆனாலும் நிலநடுக்கங்கள் நியூயோர்க் நகரம், லண்டன் மற்றும் அவுஸ்திரேலியா உட்பட, கிட்டத்தட்ட உலகில் எங்கும் ஏற்படலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40 போதை...

மாத்திரைகளுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் போதை தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ம-7,104)

## யாழில் பிறந்து...

இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை கடந்த 07ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிறந்துள்ளது.

இவ்வாறு பிறந்த குழந்தை நேற்று முன்தினம் (11) திடீரென உயிரிழந்துள்ளது.

குழந்தையின் உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60,104)

## மோ.சைக்கிளி...

நீராவிப் பகுதியில் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த மோகனபவன் வனிதா (வயது-40) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் கடந்த 09ஆம் திகதி உறவினருடன் மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்குச் சென்ற பொழுது திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்துள்ளார். இதில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். (ம-7,316)

## கிளிநொச்சியில்...

மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து குறித்த மாணவன் பயணித்தபோது குறித்த மோட்டார் சைக்கிளை டிப்பர் வாகனம் மோதியதில் மாணவன் படுகாயமடைந்துள்ளான்.

படுகாயமடைந்த மாணவன் கிளிநொச்சிப் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு டிப்பர் சாரதி பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7,315,316)

## கற்கோவளத்தில்...

கற்கோவளம் பகுதியில் கடற்றொழிலாளர்களது மீனவவாடிகள் இனம் தெரியாத விஷமிகளால் அடித்து டைக்கப்பட்டு தீ வைத்தும் எரிக்கப்பட்டுள்ளது. இதில் இரு மீனவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

நேற்று மாலை 4.00 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கற்கோவளம் கடற்றொழிலாளர்கள் சங்கத் தலைவர் சிவகுரு இராமஜெயம் மற்றும் இரு பிள்ளைகளின் தந்தையான வரதராஜன் வசந்தகுமார் ஆகியோரே படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில், தாக்குதல்தாரிகளைக் கைது செய்யும் வரை கடலுக்குச் செல்லாது தொழில் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக கற்கோவளம் மீனவர்கள் அறிவித்துள்ளனர். (ம-7,60)

## சட்டச்சிக்கலுக்கு...

பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் "மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக அரசாங்கம் தேர்தல் காலத்தில் வாக்குறுதி வழங்கியது. தமிழ் மக்களும் நம்பிக்கை கொண்டார்கள்.

ஆனால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு இதுவரையில் முறையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவில்லை.

ஆகவே மாகாண சபைத் தேர்தலை எப்போது நடத்த தீர்மானித்துள்ளீர்கள் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், பொதுநிர்வாக அமைச்சரிடம் கேள்வியெழுப்பினார்.

இதற்கு எழுந்து பதிலளித்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

இருப்பினும் தேர்தலை நடத்தும் திகதியை நிச்சயமாகக் குறிப்பிட முடியாது.

மாகாண சபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் காணப்படுகிறது. சட்டச்சிக்கலுக்கு தீர்வு கண்டதன் பின்னர் தாமதமில்லாமல் மாகாண சபைத் தேர்தலை நிச்சயம் நடத்துவோம். தேர்தலை பிற்போடும் நோக்கம் எமக்குக் கிடையாது என்றார். (ம-7)

## சுழி...

மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,60,104)

## புலம்...

தமிழர்கள் திருப்தியடைவார்கள்.

அவர்களுக்கே இது மகிழ்ச்சியைத் தரும் நாளாகும். அவர்களை திருப்திப்படுத்துவதற்கான நடவடிக்கையாகவே இது அமைந்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ என்பவர் சாதாரண நபர் கிடையாது. முழு உலகமுமே தோற்கடிக்க முடியாது எனக் கூறிய புலிகள் அமைப்பை தோற்கடித்து 30 வருட காலபோரை முடிவுக்கு கொண்டு வந்தவர்.

மக்களுக்கு வாழும் உரிமையை வழங்கிய தலைவர் அவர். நாட்டில் அபிவிருத்திகளை ஏற்படுத்தினார் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## எதிர்...

இதன்போது கல்வி விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் கேள்வி எழுப்பட்டபோது, அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இது தற்போது பேசப்பட வேண்டிய விடயம் இல்லை எனவும் பாராளுமன்ற கலாசாரத்தை மதித்து செயற்படுங்கள் எனவும் தெரிவித்தார்.

இதன்பின் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா யாழ்.மாவட்ட இலஞ்ச ஊழல் தொடர்பில் பேச முற்பட்ட போதும் இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல என சபாநாயகர் அவரின் உரையை இடைநிறுத்தினார்.

இதையடுத்து தனக்கு நேரம் வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ந்து கேட்டதால் சபையில் குழப்பம் ஏற்பட்டது.

பின்னர் இந்தச் சபையைக் கட்டுப்படுத்துவது நான். 30 செக்கன்கள் மட்டுமே வழங்குவேன் என சபாநாயகர் தெரிவித்ததை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றியிருந்தார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.09.12
சீட்டிழுப்பு இலக்கம் 5950
M 9 6 5 2 6 6
அத சம்பத
M 5 2 6 6
சீட்டிழுப்பு இலக்கம் 0525
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.09.12
சீட்டிழுப்பு இலக்கம் 0066
விருச்சிகம் 08 13 41 44
www.nlb.lk

தன நிதானய
திகதி - 2025.09.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1980
P 59 62 65 73 P

மெகா பவர்
திகதி 12/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2298
Z 20 07 48 67 78

ஜய
திகதி 2025.09.12
சீட்டிழுப்பு இலக்கம் 0218
O 4 2 0 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4192
சீட்டிழுப்பு திகதி 12.09.2025
W 03 23 38 72
W
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.12
சீட்டிழுப்பு இலக்கம் 1259
மிதுனம் 18 27 36 59 மிதுனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
12.09.2025 வெற்றி வாரம் 0658
U 2 7 8 8 0 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24.079.459.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2924
சீட்டிழுப்பு திகதி 2025.09.12 தினம் வெள்ளிக்கிழமை
09 38 43 54 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,157,760.80

சனிதா
திகதி 12.09.2025 வெற்றி வாரம் 5085
03 07 58 73 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,432,251.60

சசிரி
வெற்றி வாரம் 0768
சீட்டிழுப்பு திகதி 12.09.2025
வெள்ளிக்கிழமை
05 08 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4636
சீட்டிழுப்பு திகதி 12.09.2025 தினம் வெள்ளிக்கிழமை
02 05 45 47 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,065,204.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 02 24 37 39 46
சீட்டிழுப்பு வாரம் 2100
12.09.2025 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.593,527,753.60

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2750
சீட்டிழுப்பு திகதி : 2025.09.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00
அத கோடிபதி ADA KOTIPATHI
21 23 36 51 H

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு முன் உள்ள பொற்பதி வீதியில் 4 ½ பரப்புக் காணி வீதி முகப்புடன் சேர்ந்த நிலையில் நல்ல தண்ணீர் கிணறு, இருபக்க பாதை உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

**075 945 3391**

(5402)

## JCB வாடகைக்கு விடப்படும்

புதிய ENGLAND JCB எம்மிடம் உள்ளது. வேலை செய்யத் தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 649 1027**

(1546)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் 30,000/- 50,000/-

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-3859)

**V2 TRAVELS** 076 1410725 / 076 8226236

v2vacancies@gmail.com

## விற்பனைக்கு

- ஒரு சோடி இந்தியன் குத்துவிளக்கு - 5 அடி உயரம் - 200,000/=
- L.G. 9.0 Kg washing machine Full automatic - 35,000/=
- Computer Desk top Acer. Nitro - Intel i7- 8,700 - 130,000/=
  Laptop Dell i7- 230,000/=
- 6 அடி x 4 அடி நாய்க்கூடு - 45,000/=
- H.26 X VR - DVR + waves camera - 16 (Day-colour + night - B & W) Full set - 35,000/=
- பாவித்த செற்றி செற் 3+1+1 - 50,000/=

தொடர்பு : **071 803 4182** - உரும்பிராய்

சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்புகொள்ளவும்.

(5399)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் k.k.s வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.

**076 663 3199**

(5329)

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2660/- |
| 21-27 Kg | 2480/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3859)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237

## வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் Printers ஒன்றிற்கு Graphic designer, Type setting செய்வதற்கு வேலையாள் தேவை. யாழ்.நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

Rs 30,000 – 50,000 வரை சம்பளம் வழங்கப்படும்.

தொழில் தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

**076 192 3444, 077 482 1912**

(1548)

## வீடு விற்பனைக்கு

வேம்படி மகளிர், யாழ். மத்திய கல்லூரியில் இருந்து 100m இல் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

**076 342 4705**

(1542)

## பெண் ஊழியர்கள் தேவை

யாழில் புதிதாகத் திறக்கப்பட இருக்கும் இலங்கையின் முன்னணி நிறுவனமான UTC நிறுவனத்திற்கு பெண் ஊழியர்கள் தேவை. தமிழ் மற்றும் ஆங்கிலம் சரளமாகப் பேசக் கூடியவர்கள் அவசியம். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

01. Documentation Controller (Female)
02. Front office Executive (Female)

**Please send your CV along with details to our email**

Phone : **011 427 4110, 076 116 3355**

Email : infoutclk@gmail.com

(1544)

## காணி விற்பனைக்கு

பாரதி சனசமூக நிலையம் முன்வீதி (வலது புறத்தில் முதலாவது வீடு) உயரப்புலம் ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம் வீட்டுடன் 06 பரப்பு (நிலப்பரப்பு) காணியும் உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்புக்கு :

Whatsapp No : **+94 770 460 604**

(1545)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் மானிப்பாயில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 2 ஆவது காணி.
- மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து 600m தூரத்தில் உள்ளது.
- 20 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- ஒரு பரப்பின் விலை 55 இலட்சம்.

**பார்வையிடும் நேரம் :**
**காலை 6 மணி தொடக்கம்**
**மாலை 6 மணி வரை**

தொடர்புகளுக்கு : **ஜெயம்**

**077 814 7389 / 077 986 5457**

(5406)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 215/= | Max 3Kg |
| 1Kg கோதுமை மா | - 172/= | |
| 5Kg பிறிமா கோதுமை மா | - 950/= | ~~1150~~ |
| 1Kg சிவப்பு பருப்பு | - 235/= | Max 3Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 310/= | Max 3Kg |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 230/= | Max 3Kg |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 188/= | |
| 1Kg கடலை | - 370/= | Max 3Kg |
| 1Kg சோயா | - 310/= | |
| 1Kg கடலைப் பருப்பு | - 310/= | |
| 1Kg சிவப்பு அவல் | - 305/= | |
| 1Kg சர்க்கரை | - 255/= | |
| 1Kg உள்ளி | - 390/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |

400g Anchor 1140/= ~~1200/=~~



1Lசீனி தீப்பெட்டி 140/= ~~240/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(1547)

Happy Supermarket 0777 8080 30

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கோப்பாய் இராசபாதை வீதியில் ரெக்னிக் கொலிஜ்க்கு முன்பாக 24 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரித்து 20 அடிப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு குடியிருப்புச் சூழல், நல்ல நீர்க்கிணறு, செம்மண் தரைக் காணி.

பார்வையிடும் நேரம் :- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

**பிரதான போக்குவரத்துச் சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக**

தொடர்புகளுக்கு : **076 755 8606**

**074 338 4481 / 077 638 5683**

(5405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.